Registered as a Newspaper [illegible] 06 விலை ரூபா 5-00

நல்லூர் [illegible] நூலகம்
மாநகர[illegible] மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 28 (12 3·94) சனிக்கிழமை ஓசை 22

## மலேரியா தடுப்பு வாரத்தின் செயற்பாடுகள் குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் என்றுமில்லாதவாறு மலேரியா நோய் மிகக்கடுமையாக மக்களைப் பாதித்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. அதனைக் கூடியவரை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் மார்ச் 18ஆம் திகதியிலிருந்து 25ஆம் திகதி வரையிலான காலகட்டத்தை மலேரியாத் தடுப்பு வாரமாகக் கொண்டு பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளைக் கிராம மட்டத்தில் எடுப்பதென அரசாங்கஅதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் கூடிய இணைப்புக்குழு பிரகடனப்படுத்தியுள்ளது. இக் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து யாழ்ப்பாண பிரதேச செயலர் அறிவித்துள்ளார். ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் (6ஆம் பக்கம் பார்க்க)

# போர்க்கால வாழ்வனுபவங்களை கலைகள் சித்திரிக்க வேண்டும்

### கலைஞர்களுக்கான பாராட்டு விழாவில் தலைவர் பிரபாகரன்

''அரச அடக்குமுறையின் அழுத்தங்கள் அனைத்தையும் எமது மக்களே தாங்கி நிற்கிறார்கள். போராட்டத்தின் பெரும் பளுவையும் அவர்களே சுமந்து நிற்கிறார்கள். எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும் தளரா உறுதியுடன் துணிந்து நிற்கிறார்கள். எமது மக்களின் போர்க்கால வாழ்வனுபவங்களை கலை, இலக்கிய வடிவங்களாகச் சித்திரிக்கவேண்டும், இந்த வகையில்தான், கலை இலக்கியங்கள் காலத்தின் பதிவைச் செய்துகொள்ளவேண்டும்.''

இவ்வாறு தலைவர் பிரபாகரன், நேற்று மாலை முல்லை மாவட்ட நாடக இசைக் கலைஞர்கள் மத்தியில் பேசும்பொழுது குறிப்பிட்டார். இந்த வைபவத்தின்போது, முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த 17 நாடக இசைக்கலைஞர்களுக்கு தலைவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார் தமது சொந்த அலுவல்களையும் கைவிட்டு, முல்லை மாவட்டத்திலிருந்து இங்கு வந்து, கடந்த ஒரு மாதத்திற்குமேலாக யாழ் குடாநாட்டில் நாடகம், தெருக்கூத்து போன்ற கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றிவரும் முல்லை கலைஞர்களின் விடுதலை உணர்வை தலைவர் மெச்சினார்.

இந்நிகழ்ச்சியின்போது தலைவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''கலைஞர்கள் வாழ்க்கையை ஆழமாகப் பார்க்கிறார்கள். அவர்களது பார்வை மிகவும் உன்னிப்பானது: கூர்மையானது. மக்களது வாழ்வையும் போராளிகளது உணர்வுகளையும் துல்லியமாகச் சித்திரிக்க கலைஞர்களால் முடியும் அத்தகைய படைப்பு இலக்கியங்கள் வாயிலாக விடுதலை உணர்வையும், தேசப்பற்றையும் கலைஞர்கள் தட்டி எழுப்ப வேண்டும்.

எமது மரபு வழிவந்த கலை வடிவங்கள் கால ஓட் (6ஆம் பக்கம் பார்க்க)



தேசியத்தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்கள் நேற்று முல்லை மாவட்ட நாடக இசைக் கலைஞர்களைப் பாராட்டி பரிசில் வழங்கும் வைபவத்தில் எடுக்கப்பட்ட படம்.

## ஊர்காவற்றுறையில் கிளைமோர் தாக்குதல்

# 4 ராணுவத்தினர் பலி!

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

மாதகல் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் இரவு 9-05 மணியளவில் பண்டத்தரிப்பு, வடலியடைப்பு பகுதிகளை நோக்கி எறிகணை

## நாவற்குளம் மோதலில் ஒரு போராளி வீரச்சாவு

### சிப்பாய் பலி; பலர் காயம்

(வவுனியா)

வவுனியா நாவற்குளம் காட்டுப் பகுதியில் கடந்த 6-ம் திகதி விடுதலைப் புலிகள் போராளிகளை சுற்றிவளைக்கும் நோக்குடன் வந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதலொன்று இடம்பெற்றது.

அன்று பகல் 11.45 மணியளவில் ஆரம்பித்த இம் மோதல் 30 நிமிட நேரம் வரை நீடித்தது. இம் மோதலின் போது சிறிலங்கா இராணுவத்தினர் ... டன.

இம் மோதலின்போது ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்த நிலையில் சிறிலங்கா இராணுவத்தினர் பின்வாங்கி விட்டனர்.

இம் மோதலின்போது விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் சுரேசன்/சுசி (மு (6ஆம் பக்கம் பார்க்க)

# 12 படையினர் படுகாயம்

[கொழும்பு]

**இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று இடம் பெற்ற கிளைமோர் கண்ணி வெடியில் நான்கு கனிஷ்ட நிலை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; 12 பேர் படுகாயமடைந்தனர் என கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். விடுமுறையில் சென்ற இராணுவத்தினர் பயணம் செய்த பஸ் வண்டியொன்றே இக்கண்ணி வெடியில் சிக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.**

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; விடுமுறையில் சென்ற 20 படையினரை ஏற்றிக்கொண்டு இந்த பஸ் வண்டி வேலணையிலிருந்து ஊர்காவற்றுறை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததெனவும் இது ஊர்காவற்றுறைப் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது இந்தக் கண்ணி வெடியில் சிக்கிக்கொண்டது எனவும் கூறப்படுகிறது.

இதனால் அந்த பஸ்வண்டியில் பயணம்செய்த நான்கு படையினர் பலியாகினர் எனவும் 12 பேர் படுகாயமடைந்தனர் எனவும் மற்றைய 4 பேரும் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. படுகாயமடைந்த 12 பேரில் நால்வர் இராணுவ அதிகாரிகள் எனவும் தெரியவருகிறது.

கடந்த 24 மணிநேரத்தில் மூன்று இடங்களில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் 9 அரச படையினர் பலியாகினர். 28 பேர் காயமடைந்தனர் என கொழும்பில் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்

நேற்று முன்தினம் இரவு 9-05 மணியளவில் பண்டத்தரிப்பு, வடலியடைப்பு பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர், இச்சம்பவத்தில் மக்கள் குடியிருப்புகளை அண்மித்த இடங்களில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்த போதிலும் சேதங்

(6ஆம் பக்கம் பார்க்க)

எளில் ஆரம்பித்த இம் மோதல் 30 நிமிட நேரம் வரை நீடித்தது. இம் மோதலின் போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக உலங்கு வானூர்தி ஒன்றும் இரண்டு சியாமாசெட்டி, ஒரு புக்காரா குண்டு வீச்சு விமானமும் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்

டினன்ட் சுபேசன்/சுவி (மு

(6ஆம் பக்கம் பார்க்க)



2ம் லெப் சுபேசன்/சுவி

## மன்னார் மாவட்டத்தில் விமானக் குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தியுள்ளன.

அன்று மதியம்12 20 மணியளவில் முள்ளிக்குளம் கடற்கரைப் பகுதிக்கு வந்த இரண்டு புக்காரா விமானங்கள் 4 எறிகணைகளை வீசின.

இத் தாக்குதலால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

# தெற்கிற்கு அரலி குண்டு வெடிப்பை நினைவுறுத்தும் தாக்குதல் பி.பி.ஸி.

(கொழும்பு)

ஊர்காவற்றுறையில் நேற்று மீண்டும் நடைபெற்ற நிலக்கண்ணிவெடித் தாக்குதல் இராணுவத்திற்கும், தென் பகுதியில் உள்ள இன்னும் பலருக்கும் இரு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பயங்கரத்தை மீண்டும் நினைவிற்கு கொண்டுவரும். இவ்வாறு ஊர்காவற்றுறையில் இராணுவ பஸ் வண்டி ஒன்று நேற்று புலிகளால் கண்ணி வெடிமூலம் தகர்த்தமை குறித்து கருத்து வெளியிட்ட பி.பி.ஸி கொழும்புச் செய்தியாளர் சியாகா நாவோகசு தெரிவித்தார்.

1992 ஓகஸ்டில் வடக்கில் இதே தீவில் சிறிலங்கா இராணுவம் மிகப் புகழ்பெற்ற தனது இராணுவத் தளபதிகளில் ஒருவரையும் வேறு எட்டு உயர் படை அதிகாரிகளையும் நிலக்கண்ணி தாக்குதலில் இழந்தது. அதே போன்ற தாக்குதலில் மேலும் இராணுவத்தினர் கொல்லப்பட்டிருப்பது புலிகள் வடக்கே எந்த பாதுகாப்பையும் எவ்வளவு சுலபமாக முறித்து விட முடியும் என்பதை எடுத்துக்காட்டுகிறது எனவும் பி. பி. ஸி செய்தியாளர் மேலும் தெரிவித்தார்.

# விகிதாசார தேர்தலுக்கு பதிலாக தொகுதி வாரித் தெரிவுமுறை

## அரசாங்க வட்டாரங்களில் ஆலோசனை

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கு எம்.பிகளை தெரிவு செய்யும் தற்போதைய நடைமுறையான விகிதாசார தேர்தல் முறைக்குப்பதிலாக புதிய தேர்வுத் திட்டமொன்றை கொண்டு வருவதற்கு அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப் புதிய திட்டப்படி தற்போதுள்ள 225 உறுப்பினர்களில் 168 பேர் பழைய நடைமுறைப்படி தொகுதிவாரியான அடிப்படையிலும் எஞ்சியோர் தற்போதைய விகிதாசாரத் தேர்தல் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் பாராளுமன்றத்திலிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 168 ஆகும். தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 162. தொகுதிவாரியாகவே அப்போது தேர்தல்கள் நடைபெற்றன. பல இன மக்கள் வாழும் தொகுதிகள் பல உறுப்பினர் தொகுதியாககணிக்கப்பட்டு இரண்டு உறுப்பினர்களுக்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்பட்டு எம்.பிகள் மொத்த தொகை 168 ஆக இருந்தது. விகிதாசார தேர்தல் நடைமுறைக்கு வந்ததும் எம்.பிகளின் தொகை 225 ஆக அதிகரிக்கப்பட்டது.

விகிதாசார தேர்தல் முறையினால் தங்கள் தொகுதி எம்.பிகள் யார் என்பதை பொது மக்கள் விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது என்பது தென்னிலங்கை அரசியல்வாதிகளால் சுட்டிக் காட்டப்பட்ட ஒரு குறையாகும்.

இந்த தேர்தல் நடைமுறையை மாற்றியமைப்பதால் எழும் சாதகபாதகங்கள் நடைமுறைச் சிக்கல்கள் பற்றி

(6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு பிரதேச செயலகங்கள் 13 சிங்கள அதிகாரிகள் கையில்!

## அரசின் திட்டமிட்ட சதி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் உள்ள எழுபது பிரதேச செயலகங்களில் பதின்மூன்றை சிங்கள அதிகாரிகள் நிர்வகிக்கின்றனர். இது சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட சூழ்ச்சி நடவடிக்கை ஆகும்.

இவ்வாறு அரச அதிகாரி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும்போது-

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் தமிழ் நிலங்களை ஆக்கிரமிக்கும் திட்டத்தை தற்போதைய ஜனாதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## உலங்கு வானூர்தி நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று நண்பகல் 12.10 மணியளவில் வலிமேற்கு, வலிதென்மேற்கு வான்பரப்பில் பல

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க ஆதரவாளர்கள்மீது மூன்றுமுறிப்பில் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா மூன்றுமுறிப்பு என்ற இடத்தில் நடந்த கைகலப்புஒன்றில் ஐதேக ஆதரவாளர்கள் மூவர் தாக்குதலுக்குள்ளாகி வவுனியா ஆஸ்பத்திரியில்சேர்க்கப்பட்டுள்ளனர்

இச்சம்பவம் தொடர்பாக செய்யப்பட்டபுகாரையடுத்து இப்பகுதியிலுள்ள தமிழ்க்குழு ஒன்றின் சில உறுப்பினர்களைப் பொலிசார் கைதுசெய்தனர். அடையாள அணிவகுப்பில் தாக்கியவர்களை அடையாளம் காணுமுகமாக இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

## வரி விளம்பரம்

**'அகிலன்ஸ்'**

சகலவிதமானவாகனங்களின் இலக்கத் தகடுகளும் அழகிய முறையில் எழுதிக் கொடுப்பவர் (மஞ்சள் ÷ கறுப்பு) எழுத்தோவியர் அகிலன்ஸ், 426 கண்டி வீதி, அரியாலை. (7702)

**காருண்யா சைனீஸ்**

உத்தியோகத்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம், மதிய உணவு--மீன், இறைச்சி, முட்டை, மரக்கறிப் பாசல்கள் உங்கள் இடங்களுக்கு டெலிவரி (Delivery) செய்யப்படும். விபரங்களுக்கு: KARUNYA CHINESE, 166 1st Cross Street, Jaffna.) பாடசாலை வைபவ ஓடர்கள் சகாயவிலையில். (7718)

**தவறிவிட்டது**

அராலி மேற்கைச் சேர்ந்த கந்தையா வீரசிங்கம், சரஸ்வதி ஆகிய எமது அடையாள அட்டைகள் இரண்டும் இடம்பெயர்ந்தோருக்கான உணவு முத்திரையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7719)



## பகவான் ஆங்கில மருத்துவ சேவை

14-3-94 முதல் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (டாக்டர் சண்முகலிங்கம் வீட்டிற்கு சற்று முன்பாக) என்ற முகவரியில் மேற்படி சேவை இரு நேரமும் இயங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்.
பகவான் மருந்தகம்,
221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-8825]


## 45ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

### திருமதி சின்னராசா சிவகாமி

(தோப்பு அச்சுவேலி)

எங்கள் அன்புத் தெய்வமே, உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நாளைய தினம் 13-3-94 ஞாயிற்றுக்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் பங்குபற்றுமாறு, உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
தோப்பு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்
(இ. பாலசிங்கம்)

(7721)

## பதவிமோக ஆட்சியாளரால் இன ஒற்றுமை பங்கப்பட்டது

### வண பிரக்ஞாசார தேரோ

(கொழும்பு)

இலங்கையில் மன்னராட்சி நிலவிய காலத்தில் இனப் பிரச்சினை இருக்கவில்லை. சிங்கள, தமிழ் மன்னர்கள் அதிகாரத்தைப் பெறுவதற்காக யுத்தம் புரிந்தனரே தவிர இன ரீதியில் யுத்தம் செய்யவில்லை. இவ்வாறு வண. பிரக்ஞாசார தேரோ தெரிவித்தார்.

எட்டியாந்தோட்டை செங்கோல் கேட்போர் அரங்கில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது, சிங்கள அரச மாளிகைக்குள் தமிழர் வழிபாட்டுத்தலங்கள் அரசிகள் வணங்குவதற்காக அமைக்கப்பட்டன. சிங்கள மன்னர்கள் தமிழ் அரச குடும்பப் பெண்களை மணம் புரிந்தனர். சிங்கள மன்னர்களின் படைகளில் தமிழர்களும், தமிழ் மன்னர்களின் படைகளில் சிங்களவர்களும் பணியாற்றி வந்தனர். தமிழ் சிங்கள கலாசாரங்களும் தனித்தனியே பாதுகாக்கப்பட்டன.

புத்த சமயம் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு பரவியது. இன்று சிங்கள மக்கள் மிகவும் பக்தியாய் வழிபடும் பத்தினித் தெய்வம், கதிர்காமக் கடவுள் போன்ற பல தெய்வங்கள் தமிழ் நாட்டிலிருந்தே கொண்டு வரப்பட்டவையாகும். மேற்படி வழிபாடுகளில் இனப் பாகுபாடு காட்டப்படுவதில்லை.

சுதந்திரத்திற்குப் பின்னர் நாட்டில் திணிக்கப்பட்ட பாராளுமன்ற ஆட்சி முறையே இனப் பாகுபாட்டிற்கு வழி சமைத்தது. ஆட்சியாளர்கள் அரசியல் வாரியாகப் பிரிந்தனர். பெரும்பான்மை மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற சிரத்தை காட்டிய அதேவேளை சிறுபான்மையினரின் சிரத்தையில் அவர்கள் அலட்சியமாக இருந்தனர். தொடர்ந்து பதவிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் அத்தகைய போக்கையே கடைப்பிடித்ததால் சிறுபான்மை இனத்தவர்கள் பெரும்பான்மையின ஆட்சியாளரை சந்தேகத்துடன் நோக்கினர்.

பதவிமோகம் கொண்ட ஆட்சியாளர்களினால் இனங்களுக்கு இடையே இருந்த ஒற்றுமை பங்கப்படுத்தப்பட்டது. இதனால் தமிழ்மக்கள் இன்று ஆயுதமேந்தி அரசுடன் போராடுகின்றனர். இந்த நிலைமை மேலும் நீடிக்க விடக்கூடாது அனைத்து இனத்தவரதும் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து நாட்டின் இறைமைக்கு பங்கம் ஏற்படாத வகையில் இப்போதைய பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டாக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## 'விருது வழங்கலும் பாராட்டு விழாவும்'

முன்னாள் சாவகச்சேரி நகரசபை ஆணையாளர்

**திரு. த. நவரத்தினராசா அவர்களுக்கு**

தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தின் ஐந்து ஆண்டுநிறைவில் அதியுயர் விருது வழங்கலும் பாராட்டு விழாவும் இடம்பெறவுள்ளன.

இடம்:
சாவகச்சேரி நகராட்சி மண்டபம்

காலம்:
13-03-94 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி

தலைவர்:
திரு. இரா. சத்தியானந்த சர்மா (தென்மராட்சி இந்து இளைஞர் மன்றத் தலைவர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**தென்மராட்சி இந்து இளைஞர் மன்றம்**

விளம்பர அன்பளிப்பு:
சன்ரைஸ் றேடேஸ்
சாவகச்சேரி

(7717)

## அறிவித்தல்

10-03-94ல் நடைபெறவிருந்த காத்தவராயன் கூத்து தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று (12-03-94) இரவு 7 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் மேடையேறுகிறது அன்று விற்பனை செய்யப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள் இந் நிகழ்வுக்கு பயன்படுத்தலாம் என்பதை அறியத் தருகின்றோம்.

வெளிவாரி மாணவர் ஒன்றியம்
பட்டப்படிப்புகள் கல்லூரி.

(சி-8826)

## இன்று

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக அன்பளிப்பு நிதிக்காக

செல்லையா - மெற்றாஸ்மயில் நெறியாள்கையில்

3ஆவது தடவை மேடையேறுகின்றது

# காத்தவராயன்

(சிந்துநடை மரபுவழிக் கூத்து)

தாலாட்டு, கும்மி, ஒப்பாரி, ஊஞ்சாட்டும் பாட்டு, கப்பல் பாட்டு என்னும் நாட்டார் பாடல்களை ஒருமுகப்படுத்திய நெறியாள்கையில் யாழ், புனித மரியாள் மகா வித்தியாலய மாணவர்களான பிரபல பாடகர் S. G சாந்தனின் புதல்வர்கள் பிரபுராஜ், மோகன்ராஜ் என்பவர்களுடன் அக் கல்லூரி மாணவர்களான

த. சசிக்குமார் த. சசிகாந்தன் ம. ஜெயகதிஸ்வரி, இ. கோபிநாத், ப. ரெறன்ஸ் றோஷான் றோ. சாம்சன் றோய், நா. இன்ஷிலி ச. விமலராஜ், செ. கமலதாஸ், ஆ. மோகனதாஸ், கே. இந்துமதி, இ. ராஜேந்தினி, இ. டொறின் மாலினி, பெ. மேரி பிரியதர்ஷினி, த. சாந்தி, சி. சுகந்தினி, இ. பாலரூபி, இ. கங்கா ஆகியோரின் உன்னத நடிப்பில் உருவாகிய வெற்றிப்படைப்பு

காலம்: **12-03-1994** சனிக்கிழமை இரவு 8 மணி

## அபராதம் விதிக்கப்பட்டது

(பருத்தித்துறை)

கொட்டனால் அடித்து படுகாயப்படுத்தியதாக பருத்தித்துறை தமிழீழ காவல்துறையால் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 2,000 ரூபா அபராதம் விதித்த பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றம் காயப்பட்டவருக்கு இழப்பீடாக 15,000 ரூபா செலுத்துமாறும் உத்தரவிட்டது. அல்வாய் மேற்கைச் சேர்ந்த தாமோதரம் பாலசிங்கம் என்பவருக்கு சக்கோட்டையைச் சேர்ந்த சவரிமுத்து அலோசியஸ் என்பவர் கொட்டனால் அடித்து படுகாயப்படுத்தினார் என்று குற்றஞ் சாட்டி பருத்தித்துறை தமிழீழ காவல் துறையினர் பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர் இவ் வழக்கு தமிழீழ நீதியாளர்

## நினைவு கூருகின்றோம்,

**12-03-1994**

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை-கல்முனைப் பகுதியிற் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்படுகையில் ஒரே சயனைற்றைப் பகிர்ந்து உட்கொண்டு வீரச்சாவெய்திய-

சுந்தர் (நல்லதம்பி சுந்தரலிங்கம் - காரைதீவு-அம்பாறை)

லெப். உமாரமஸ் (முத்துக்குமாரு சந்திரகுமார்-கல்லடி - மட்டு)

மட்டு - துறைநீலாவணைப் பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்,

யாழ் - வல்வெட்டித்துறைப் பகுதியிற் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சிற் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்- பருத்தித்துறையிலிருந்து யாழ் நகரை நோக்கி நடைபெற்ற பொதுமக்கள் ஊர்வலம் ஒன்றின் மீது நல்லூர், முத்திரைச் சந்தைப் பகுதியில் வைத்து தேசவிரோதக் குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிற் கொல்லப்பட்ட பெண் உட்பட 2 தமிழர்கள்-

1987ஆம் ஆண்டு மன்னார் - வெள்ளாங்குளம்,

காலம்: **12-03-1994** சனிக்கிழமை இரவு 8 மணி

இடம்: யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய திறந்தவெளி அரங்கு

முதன்மை விருந்தினர்: செல்வி திலகவதி பெரியதம்பி
(தெற்கு வலய கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்:

- திரு. அன்பரசன்
(பொறுப்பாளர், கலை பண்பாட்டுக்கழகம்
தமிழீழ விடுதலைப் புலிகள் - யாழ் மாவட்டம்)
- திரு. சி. புலேந்திரன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்
நல்லூர் - யாழ்ப்பாணம்)
- திரு. இ. இளங்கோவன்
(உதவி பிரதேச செயலர் நல்லூர்)
- வைத்திய கலாநிதி வை. தியாகராஜா
(உரிமையாளர் - மெடி எயிட்ஸ் நிறுவனம்,
தலைவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
கோப்பாய் பிரதேச செயலர்பிரிவு, உபதலைவர்
லயன்ஸ் கிளப், காப்பாளர் மக்கள் நலன்
காக்கும் பிரிவு, கோப்பாய்)
- திரு. வி. மாணிக்கம்
(அதிபர், கனகரத்தினம் மத்திய மகா வித்தி
யாலயம்)
- திரு. சி. தார்சிசியஸ் அதிபர், புனித மரியாள் வீதி.

பின்னணி: பாட்டு

திரு. க. குணபாலசிங்கம் பி. ஏ.
(ஆசிரியர், யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை)
திரு. க. தெய்வகுலரத்தினம்
(கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்)
திரு. ப. கனகராஜா
(பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்)

செல்வி யோ. ஞானப்பழம்
(பட்டதாரி மாணவி, யாழ். பல்கலைக்கழகம்)
செல்வி கு. தேவமனோகரி
(சங்கீத ஆசிரியை, கலாநிதி தியாகராஜா வித்
தியாலயம் - காரைநகர்)
செல்வி பி. பொன்னுத்துரை
(சங்கீத ஆசிரியை, புனித யோசெப் வித்தியா
லயம் - பாசையூர்)

ஆர்மோனியம்
இசையமைப்பாளர் எஸ். பொன்னுத்துரை

உடுக்கு / பாட்டு
திரு. க. மனோகரன்

மோர்சிங்
மூளாய், தவம் புத்திரன்

ஒளி ''மனோ லைட்''
(அன்பளிப்பு சிவசக்தி வைத்திய நிலையம், கண்டிறோட், அரியாலை)

ஒப்பனை-உடை ''ஸ்ரனிஸ் மாஸ்ரர்''
(அன்பளிப்பு: அமரர் எஸ். வைத்திலிங்கம் நினைவாக அவர் புதல்வன் வைத்தியகலாநிதி
வை. தியாகராஜா)

ஒலி சுந்தரம் அரியாலை
(அன்பளிப்பு: கே. எஸ். இரத்தினம், 102 ஏ, கச்சேரி - நல்லூர் வீதி, நல்லூர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்பளிப்பு - ரூபா 15 ஆசனம் ரூபா 100

- பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

விளம்பர அன்பளிப்பு:

**இ. ச. பேரம்பலம் அன் சன்ஸ்**

மிதிவண்டிக்கான சகல உதிரிப்பாகங்களும், புதிய மிதிவண்டிகளும் விற்பனைக்குண்டு
50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (7716)

தாக்கல் செய்திருந்தார் இவ் வழக்கு தமிழீழ நீதியாளர் திரு. ஒப்பிலான் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இதனையடுத்தே நீதியாளர் எதிரிக்கு 2,000 ரூபா அபராதம் விதித்து இழப்பீடாக 15,000 ரூபா செலுத்துமாறும் உத்தரவிட்டார். (25

## கல்வீச்சு

வாழைச்சேனை முஸ்லிம் பகுதியில் வசிக்கும் ஐ தே க. அமைப்பாளர் ஒருவரின் வீட்டிற்கு அண்மையில் கல்வீசப்பட்டதுடன் உள்ளூர் தயாரிப்பான கைக்குண்டு ஒன்றும் வீசப்பட்டுள்ளது.

## 'துல்லியம்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் கோப்பாயில் நடைபெற்றது.

இந் நிகழ்வில், விஞ்ஞான ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் கணித விளையாட்டுக்கள் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் பரிசில்களை வழங்கினார்.

இத்தோடு குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில் 'துல்லியம்' என்ற சஞ்சிகையை கல்விப் பணிப்பாளர் (வலயம்-2) க. கந்தசாமி வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை ஈழநாதம் நிர்வாக இயக்குனர் திரு. தினேஷ் பெற்றுக்கொண்டார்.

இங்கு பல அறிஞர்கள் கலந்துகொண்டு கருத்துரை ஆற்றினார்கள். (தி)

பெண் உட்பட 2 தமிழர்கள்-

1987ஆம் ஆண்டு மன்னார் - வெள்ளாங்குளம், பாலியாற்றுப் பகுதியில் பயிற்சிக்கு வந்திருந்தபோது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சாவடைந்த,

**றோம்** (காலிக்குட்டி சந்திரன்- 5-ம் கட்டை - மன்னார்)

1988ஆம் ஆண்டு மட்டு- பன்முனைத்துறைப்பகுதியிற் தேசவிரோதக்குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**கடாபி** (க. பாலிப்போடி - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை - மட்டு)

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு - பெரியபுல்லுமலைப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2ம் லெப். மாதவன்** (வடிவேல் தவராசா- மட்டக்களப்பு)

1991ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**மைக்கல்ராஜ்** (மட்டக்களப்பு)

**2-ம் லெப். சித்தா** (மன்னார்)

**கப்டன் தினேஸ்** (இராசதுரை ரவீந்திரமோகன்- கற்கோவளம் - பருத்தித்துறை)

**கப்டன் நிமலன்** (தங்கவேல் கலைச்செல்வன் - பொலிகண்டி, வல்வெட்டித்துறை-யாழ்)

**ரெனோ** (தியாகராசா அன்ரன் லிங்கநாதன்- முள்ளியான்-வெற்றிலைக்கேணி -யாழ்)

**அறிவழகன்** (தேவதிரவியம் அல்பேட்புஸ்பராசா- பலாலிவடக்கு, வசாவிளான் - யாழ்)

**சைனிஸ்** (முத்துக்கறுப்பன் குமரகுருபரன் - வியாபாரிமூலை, பருத்தித்துறை-யாழ்)

1992ஆம் ஆண்டு யாழ்- திருநெல்வேலியில் எமது முகாமொன்றில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மின்சார விபத்தில் சாவடைந்த-

**ஆண்டான்** (குமாரசாமி விஜயமனோகரன் -ஆலங்கேணி, பூநகரி - மன்னார்)

மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஏறாவூர் வாசியான தமிழிளைஞன்,

1993ஆம் ஆண்டு கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

துணைப்படைவீரர்,

**சீமான்** (இலுப்பைக்கடவை - மன்னார்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8821)

நல்லூர் இனை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதவி கல்விப் பணிப்பாளருக்கு கோத்தணி அதிபர் கடமை

(யாழ்ப்பாணம்)

மாவட்டக் கல்வித்திணைக்களங்கள் ஒன்று ஏபிசி, 2-ம், 3-ம் தரப் பாடசாலைகளில் கடமையில் ஈடுபடமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும் என்று வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சுற்று நிருபம் ஒன்று தெரிவிக்கின்றது. இச்சுற்று நிருபம் வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்துக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் ஏற்கனவே கோட்டக் கல்வி அமைப்பின் கீழ் கொத்தணி அதிபர்கள் ஆற்றி வந்த கடமைகள் யாவும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

அதிகார பரவலாக்கும் திட்டத்தின் பிரகாரம் பிரதேச செயலாளர் மட்டத்தில் தற்போது கல்விப் பணிமனைகள் அமைந்திருப்பது தெரிந்ததே.

# இடமாற்றவிண்ணப்பத்திற்கு உடன் பதிலளிக்க வேண்டும்

### மாகாண கல்வி அமைச்சு அறிவுறுத்தல்

(நல்லூர்)

ஆசிரியர்கள் இடமாற்றம் கோரி விண்ணப்பங்களை அனுப்பும் போது இது தொடர்பான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெற்றதும் உடன் அவைகளைத் தரம் பிரித்து நடவடிக்கை எடுப்பதுடன் இது தொடர்பாக எடுத்த முடிவுகள் பற்றிய விபரங்கள் சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு கட்டாயம் தெரியப்படுத்தப் படவேண்டும் என வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணியாளர்களுக்கும் தெரியப் படுத்திஉள்ளது.

இடமாற்றம் சரியாயின் இது தொடர்பாக அறிவிக்கப் படும் எனவும் பதில் ஆசிரியர் நியமிக்கப்படும்வரை இடமாற்றம் செய்யமுடியாதுஎனவும் மாற்றம் பெறுவதற்கு நீங்கள் தகுதியில்லைஎன்பன போன்ற விபரங்கள் அடங்கிய பதில் குறிப்பிட்ட இடமாற்றம் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப் படவேண்டும்எனவும் வடக்கு கிழக்கு மாகாணகல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (17)

# இலக்கத் தகடுகள் விநியோகம்

நடப்பாண்டுக்கான துவிச்சக்கர இலக்கத் தகடுகள் நல்லூர் பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வருகின்றன. நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து துவிச்சக்கர வண்டிப் பாவனையாளர்களும் மேற்படி பிரதேச சபையில் இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளலாமென பிரதேசசபை விசேட ஆணையாளர் திரு ஆ. மகாலிங்கம் கேட்டுள்ளார். (09)

# உலர்உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப.நோ.கூ. சங்கம் இடம் பெயர்ந்தவர்களிற்கான மாசி மாத முதல் இரு வார உலர்உணவு விநியோகத்தை 10-03-94 அன்று அதன் நிவாரணக் கிளைகள் மூலம் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (88)

# திருச்சபையின் பொறுப்பும் மேலும் பகிரப்பட வேண்டும்

### மேய்ப்புப்பணி மாநாட்டில் வலியுறுத்து!

(யாழ்ப்பாணம்)

'21ஆம் நூற்றாண்டை உலகம் எதிர்நோக்கியிருக்கும் இக்காலகட்டத்தில் கத்தோலிக்கத் திருச்சபை யாழ். மறைமாவட்டத்தில் கொடுமையான போரின் பின்னணியில் நின்று தான் குருத்துவத்தையும், பொதுமக்களின் வாழ்வையும் பார்க்க வேண்டியது அவசியம்' கத்தோலிக்கத்திருச்சபையின் மேய்ப்புப் பணி மாநாட்டில் நேற்றைய அமர்வின் போது மேற்படி கருத்து வலியுறுத்தப்பட்டது.

இம்மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்படுகையில் இன்றைய நிலையில் திருச்சபையின் பொறுப்புக்களும் பணிகளும் மேலும் அதிகமாகப் பகிரசப்பட வேண்டும்என்றும் மனம் உடைந்தவர்கள் மற்றும் உடல், உள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய நம்பிக்கையை ஊட்டும் வகையில் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும். என்றும் வலியுறுத்தப்பட்டது. நேற்றைய இம்மாநாட்டில் திருமலை, மட்டக்களப்பு ஆயரின் பிரதிநிதிகளாக அருட் திரு. ஜோசவ் மேரி, அருட் திரு அம்புறோஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நிதி அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் சிறார்களின் வருங்கால நன்மை கருதி கொடித்தின நிகழ்வின்போது கோப்பாய் அரிமா சங்கத்தின் தலைவர் திரு.எஸ். பாலசுந்தரம் பதினையாயிரம் ரூபாவை அன்பளிப்பாக இந்த சமயப் பேரவைத் தலைவர் திரு. நா. முத்தையாவிடம் கையளித்தார். (24)

# சிங்கள இன உணர்வு நிரம்பிய சிறந்த பௌத்தன் டி.பி. விஜேதுங்கா

### -அமரபுர பீடாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எங்கள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மலை நாட்டை [illegible]

கள் கொண்ட ஓர் சிறந்த பௌத்தன். பெரும்பான்மையினர் உணர்வுகளை சிறுபா [illegible]

புர ஸ்ரீ தர்மரகித நிகாயோ பிரதம தேரோ மாதினே பஞ்ஞாசீல மகா தேரோ தெரிவித்துள்ளார்'

# நேர்மையான கொள்கை மூலமே பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்

### - குமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கள அரசியல்வாதிகளிடையே இனப்பிரச்சினை தொடர்பாக தூய்மையான நேர்மையான ஒரு கொள்கை உருவாகவேண்டும். அத்துடன் தமிழர்கள் நம்பிக்கை வைத்திருப்பவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அடுத்ததாக தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற தயாராக இருக்கவேண்டும். இந்நிலையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்'' இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் ஸங்காதீப பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; மேற்கூறப்பட்ட விடயங்களைக் கவனத்திற் கொள்ளாத எந்த ஒரு முயற்சியும் வெற்றியளிக்கமாட்டாது என்றார்.

இது இன்று நேற்று ஏற்பட்ட பிரச்சினை அல்ல. சுமார் 50 ஆண்டுகளாக உள்ள பிரச்சினை. எனவே இனப்பிரச்சினை இல்லை என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறுவது அவரது அரசியல் தெளிவின்மையையே காட்டுகிறது. பயங்கரவாதப் பிரச்சினை எனக்கூறி இராணுவத் தீர்வு காண முற்பட்டால் அது மிகவும் பாரதூரமான, தீர்க்க முடியாத நிலைக்கு கொண்டு செல்லும்.

அரசாங்கத்துடன் ஒட்டுண்ணிபோல் செயற்படும் தமிழ்க் குழுக்களை தமிழர்களின் பிரதிநிதிகள் எனக் கூற முடியாது இந்தக் குழுக்களை கைக்கூலிகள் அல்லது பணத்திற்கு அடிமையானவர்கள் என்றேகூறமுடியும் என அவர் மேலும் கூறினார்.

# கம்புறுப்பிட்டியவில்மோதல் வாகனங்கள் சேதமாகின

(கொழும்பு)

கம்புறுப்பிட்டிய பகுதியில் ஏற்பட்ட கட்சி மோதல்களில் இரு வாகனங்கள் சேதமாக்கப்பட்டதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

தென் மாகாண சபையின் தேர்தலுக்கானபொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டம் இப்பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருந்து போது ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் அப்பகுதியில் ஊடறுத்துச் செல்ல முற்பட்டபோது இம்மோதல் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இரு தரப்பினருக்கும் இடையே மோதல்கள் இடம் பெற்றதுடன் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வீதிவிளக்குகளை அதிகரிக்க மாநகரசபை திட்டம்

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் போதாமையினாலேயே நீண்டநேரம் வீதி விளக்குகளை எரிய வைக்க முடியாமல் உள்ளது. எரிபொருள் தாராளமாகவும் பொதுமக்களின் ஆதரவு தொடர்ந்தும் இருப்பின் வீதி விளக்குகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தி நீண்ட நேரம் எரிய வைக்க முடியும் என்று யாழ். மாநகரசபையின் மின்சாரப்பொறியியலாளர் திரு. நவரட்ணராஜா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். தற்போது 320 வீதி விளக்குகள் எரிய வைக்கப்படுகின்றன. இவற்றிற்குமூன்று பீப்பா மண்ணெண்ணெய் மாதம் ஒன்றிற்குத் தேவைப் படுகிறது.

மாநகரசபை எல்லைக்குள் குறிப்பாக சன நடமாட்டம் அதிகமுள்ள வீதிகளில்விளக்குகளின் தொகையை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெகு விரைவில் விளக்குகளின் தொகையை அதிகரித்து மொத்தத்தில் 500 விளக்குகள் வரை எரிய வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாதம்ஒன்றிற்கு சில விளக்குகள், விஷமிகளால் சேதமாக்கப்படுகின்றன.

யாழ். மாநகரசபைஎல்லைக்குள் உள்ளஇருள் சூழ்ந்தவீதிகளைப் பிரகாசிக்க வைப்பதில் மாநகரசபை தொடர்ந்து முயன்று வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்'

(தி, பா)

# பளை, மாசார் பகுதியில் காய்ச்சல் அதிகரிப்பு

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் காய்ச்சல் மற்றும் வயிற்றோட்ட நோயினால் வயோதிபர்கள், குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காய்ச்சல், மற்றும், வயிற்றோட்டம் என்பவற்றால் பளை இந்திராபுரம் பகுதியைச்சேர்ந்த சு. ஆறுமுகம் (65 வயது) நேற்றுமுன்தினம் மரணமானார். மேலும் மருதங்கேணி, மாசார், இயக்கச்சி போன்ற தூர இடங்களிலிருந்தும் நோயாளர்கள் பெருமளவில் பளை மருத்துவமனைக்கு வந்தவண்ணமுள்ளனர். எனினும் மருத்துவமனையில் போதிய வசதிகள் இன்மையால் நோயாளர்கள் மரநிழலில் தங்குவதும் ஒரேஒரு வைத்தியர் மட்டுமே சேவையில்இருப்பதால் இரவுபகலாக அவரே தொடர்ந்து சேவையாற்றுவதும் மருத்துவ மனையில் முக்கிய பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதும் குறிப்பிடத்தக்கவையாகும் (89)

# மன்னாரில்பெண்கள்தினம் சிறப்புடன் இடம்பெற்றது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அனைத்துலக பெண்கள் நாள் வெகு சிறப்பாக நடைபெற்றது. பாண்ட் வாத்திய இசையுடன் காலை 8.05 மணியளவில் ஆரம்பித்த இந்நிகழ்வை மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் ஞானி மற்றும் மாணவர் அமைப்பு நடுவப் பணியகப் பொறுப்பாளர் செல்வி தமயந்தி ஆகியோர் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். மன்னார் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி வளர்மதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செல்வி சுதா, மன்னார் மாவட்ட தளபதி லக்ஸ்மன், செல்வி காமினி, மன்னார் மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் அலெக்ஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# பிரிவுத் தேர்தல்கள் நடத்த செஞ்சிலுவைசங்கம் ஏற்பாடு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் 14 பிரிவுகளிலும், பளைப் பிரிவிலும் 27-03-94 மு.ப. 10.00 மணிக்கு நடைபெறவுள்ள அவ்வப் பிரிவு ஆண்டுப் பொதுக் கூட்டத்தில், தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், 5 நிர்வாக சபை உறுப்பினர் ஆகியோருக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

13-03-94 இல் பிரிவுக் காரியாலயத்தில் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்படும். 15-03-94 இல் விரும்பியோர் அங்கு வாபஸ் பெற்றுக் கொள்ளலாம். தேர்தலில் பங்குபற்றும் வாக்காளர் பெயர்ப் பட்டியல் அவ்வப் பிரிவுக் காரியாலயத்திலும், கிளைக் காரியாலயத்திலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. போட்டிகள் நடைபெறுமாயின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தேர்தல் குழு ஒன்றினை நிறுவி, தேர்தல் நடைபெறுவதற்கான வழிவகைகளை சுற்றறிக்கை மூலமாக கிளைத் தலைமையகத்தில் இருந்து அனுப்பப்பட்டுள்ளன.

எங்கள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மலை நாட்டை சேர்ந்த சிங்கள பாதுகாவலன். சிங்கள இனஉணர்வுகள் அவரிடம் உள்ளது; உணர்வு பௌத்தன். பெரும்பான்மையினர் உணர்வுகளை சிறுபான்மையினர் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே ஜனாதிபதியின் விருப்பம் என அமர

## ஆசிரிய ஆலோசகர்களுக்கு நேர்முகப் பரீட்சை ஏப். 23-ல்

(கொழும்பு)

ஆசிரிய ஆலோசகர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஏப்ரல் 23ஆம் திகதியன்று நடைபெற இருப்பதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இருபத்தியொரு பாடங்களுக்காக ஆசிரிய ஆலோசகர்கள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்றனர் என்றும், 6600 பேர் இதில் நியமிக்கப் படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கணிதம், ஆங்கிலம், தாய்மொழிகள், சமயங்கள், வர்த்தகம், கலாசாரம், நடனம் போன்ற முன்னணிப் பாடங்களுக்கு இந்த ஆசிரிய ஆலோசகர் நியமனம் வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் கமிஷன் அமைக்க நடவடிக்கைஎடுக்கப்படுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் பொது தேர்தல் என்பன நடைபெற முன்னர் ஒரு தேர்தல் கமிஷன் வொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக பாராளுமன்ற தெரிவு குழுவிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதில் ஓய்வுபெற்ற நீதிபதி வொருவர் தலைவராக இருப்பார் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னர் இக்கமிஷன் ஆரம்பிக்கப்படும் என்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இல.-இந்திய ஒப்பந்தத்தை முஸ்லிம்கள் ஏற்கமாட்டார்

### முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலர்

(கொழும்பு)

அவசர கால சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை ஒருபோதும் முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலர் சாவு அஜீஸ் தெரிவித்தார்.

தமது விருப்பத்திற்கு மாறான இவ் ஒப்பந்தம் குறித்து மேலதிகமாக எதையும் தெரிவிக்க விரும்பவில்லை என்று தெரிவித்த அவர் எனினும் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் முஸ்லிம் மக்கள் மீது தமிழ், சிங்கள மக்கள் சந்தேகம் கொள்வார்கள் எனவும் எனவே முஸ்லிம் மக்களுக்கே இதனால் ஆபத்து ஏற்படுமென்றும் ஆகவே சர்வசன வாக்கெடுப்பை ஒத்திவைப்பதே முஸ்லிம் உயிர்களைக் காப்பாற்றும் நடவடிக்கையாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

பிரதம தேரோ மாதினே பஞ்ஞாசில மகா தேரோ தெரிவித்துள்ளார்.

உலகத்திலே எல்லோருக்கும் சீவிக்க வேண்டிய நாடுகள் உள்ளது. அவர்கள் வணங்கும் ஆலயங்களும் உள்ளது ஆனால் சிங்கள பௌத்தனுக்கு உள்ளது இந்த ஒரு நாடு மட்டுமே. எனவே சிங்களவர் இங்கேதான் சீவிக்க வேண்டும். இது சிங்கள பௌத்த நாடு என்பதை மறந்து விடக்கூடாது. எனவே இந்த பௌத்த நாட்டை நாம் காப்பாற்ற வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

துட்டகைமுனு அரசன் ஒருநாள் ருவன் வெலிசாய அத்திவாரக்கல்நாட்டுவதற்கு பல பக்தர்கள் வந்தார்கள். எங்கள் நாட்டில் இருந்து வெளியே சென்று எமது சங்க அமைப்புக்களை நாம் கட்டியெழுப்பமுடியாது நாம்வேறு சமயங்களுக்கு எதிரானவர்கள் அல்ல. எமது சமயத்தையும் இனத்தையும், பாதுகாக்கவும் அபிவிருத்தி செய்ய வேண்டும் எனகேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## மூக்குக்கண்ணாடி அன்பளிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வயோ சமூகத்தினர் தென்மராட்சிப் பகுதியில் உள்ள கண்பார்வை குறைவான வயோதிபர்களில் ஒரு பகுதியான 30 பேருக்கு சென்ற வியாழக்கிழமை இலவசக் கண்ணாடியினை வழங்கியுள்ளனர்.

இக் கண்ணாடி வழங்கும் வைபவத்தில் டாக்டர் சிவபாதம் அவர்களும் சாவகச்சேரி நகராட்சி மன்ற விஷேட ஆணையாளர் திரு. சி. நடராசா அவர்களும் கலந்து கொண்டனர். இப் பார்வை குறைந்தவர்களுக்கான இலவசக் கண்ணாடி மேலும் பலருக்கு வெகுவிரைவில் வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

மாதம் ஒன்றிற்குத் தேவைப் படுகிறது; அவர் குறிப்பிட்டார்'

(தி. பா)

## மஞ்சள் பத்திரிகைகளின் உரிமையாளர்கள் கைது

### பொலிசார் நடவடிக்கை

(கொழும்பு)

மட்டரகமான பாலியல் செய்திகளை வெளியிடும் மஞ்சள் பத்திரிகை உரிமையாளர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர். கொழும்பில் சிங்கள மொழியில் வெளிவரும் இந்தப் பத்திரிகைகளைத் தடை செய்வதே இந்தக் கைது நடவடிக்கையின் நோக்கமாகும்.

பாலியல் செய்திகளைப் பிரசுரிக்கும் சுமார் பத்து லட்சம் பத்திரிகைப் பிரதிகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகத் தெரிய வருகிறது. அதே வேளை சில அரசியல்வாதிகள் தமது செல்வாக்கைப் பாவித்துப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் பத்திரிகை உரிமையாளர்களை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகப் பொலிஸ் தரப்பில் சொல்லப் படுகிறது.

தெகிவளை, கல்கிசை மற்றும் பெகிலியகொடப் பகுதியிலேயே இந்தப் பத்திரிகைகள் அச்சிடப் படுகின்றன.

## உலங்குவானூர்திபறப்பதால் வனவிலங்குகள் பீதி

### உடன் நிறுத்த கோரிக்கை

(கொழும்பு)

சிங்கராஜ வன பகுதிக்கு மேலாக உலங்கு வானூர்தி சென்றிருப்பதாகவும், இது சர்வதேச வனசட்டத்திற்கு முரணான செயல் என வன விலங்கு பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இந்த உலங்கு வானூர்தி நாளாந்தம் செல்வதாகவும், இதனால் வன விலங்குகள் பீதி அடைந்துள்ளதாகவும் இதனை உடனடியாகநிறுத்துமாறு சிங்கராஜ வனவிலங்கு பிரிவினர் வன பரிபாலனசபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிங்கராஜ வனபகுதிக்கு மேலாக உலங்கு வானூர்தி எதுவும் சென்றதாக தமக்கு தகவல்கிடைக்கவில்லையென்றும் இவ்வாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் பெரிய தாக்கம் வனவிலங்குகளுக்கு ஏற்பட்டு இருக்கும் என வன விலங்கு திணைக்கள உயர்அதிகாரி ரமணி எல்லே பொல தெரிவித்தார்.

## சிங்கள மொழி படிவங்கள் பருத்தித்துறைக்கு வந்தன

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகத்திற்கு மாணவர் உணவு முத்திரைகளை வழங்குவதற்கென சிங்கள விண்ணப்பப்படிவங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தமிழ் பகுதிக்குத்தேவையற்றதான இச்சிங்கள விண்ணப்பப்படிவங்களால் இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் உத்தியோகத்தர்கள் பலத்த சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.

(25)

படும்; 15-03-94 இல் விரு ... அனுப்பப்பட்டுள்ளன.

## அனுமதி பெறாமல் மரம் ஏற்றியவருக்கு அபராதம்

(பருத்தித்துறை)

அனுமதியின்றி உழவு இயந்திரத்தில் பச்சை மரங்களை ஏற்றிச் சென்றவருக்கு 9,000 ரூபா அபராதம் விதித்த பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றம் 3,000 ரூபா பெறுமதியான பச்சை மரங்களையும் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டது.

பருத்தித்துறை வியாபாரி மூலையைச்சேர்ந்த கந்தையா ஞானசம்பந்தன் என்பவர் சிறிய உழவு இயந்திரத்தில் சுமார் 3 000 ரூபா பெறுமதியான பச்சைமரங்களை அனுமதியின்றி ஏற்றிக்கொண்டு சென்றசமயம் பருத்தித்துறை தமிழீழ காவல்துறையினரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

இதனையடுத்து காவல்துறையினர் அனுமதியின்றி பச்சை மரங்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்றதாகக் குற்றஞ்சாட்டி தமிழீழ நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர் இவ்வழக்கு பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் நீதியாளர் திரு. ஒப்பிலான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிக்கு 9,000 ரூபா அபராதம் விதித்த நீதியாளர் அனுமதியின்றி ஏற்றிவரப்பட்ட பச்சை மரங்களையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார்.

(15)

## இந்திய மீனவர் தாக்குதல் இனியும் தொடரமாட்டாது

### - சிறிலங்கா உறுதியளிப்பு

(கொழும்பு)

இந்திய கடற்பகுதியில் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை முற்றிலுமாகத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் என்று சிறிலங்கா அரசு இந்தியாவிற்கு உறுதியளித்துள்ளது.

சமீபத்தில் சிறிலங்காவிற்கு வந்த இந்திய குழுவினர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. ஏ. சி. எஸ். ஹமீத்தை சந்தித்து நடத்திய பேச்சு வார்த்தையின் போதே அவர் இவ்வாறு உறுதியளித்தாராம்.

மீனவர்கள் மீது தாக்குதல் நடைபெறாமல்தடுக்க வேண்டும் என இந்தியா ஏற்கனவே சிறிலங்கா அரசைக்கேட்டிருந்தது தெரிந்ததே.

## அரைஇறுதிஆட்டம் மீண்டும் இன்று நடைபெறவுள்ளது

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர்நிர்மாண நிதிக்கான உதைபந்தாட்டசுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டம் இன்று பிற்பகல் நான்கு மணியளவில் மீண்டும் நடைபெறவுள்ளது.

பாடுமீன் சழகத்தை எதிர்த்து சென்; அன்ரனீஸ் கழகம் விளையாடும்; இவ் ஆட்டம் பாசையூர் அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டம் வெளிச்சம் போதாமை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டமை தெரிந்ததே.

# வட-கிழக்கை பிரிக்கும் முயற்சி தமிழ் மக்களை ஏமாற்றும் செயல்

## - தமிழ்க் குழுக்கள் ஆட்சேபம்

(கொழும்பு)

தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாகப் பிரித்துவிடும் முயற்சியாக ஸ்ரீலங்கா அரசு நடாத்த எண்ணியுள்ள சர்வசன வாக்கெடுப்பிற்கு தமிழ்க் குழுக்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

இவ் வாக்கெடுப்பு முயற்சியை எதிர்த்து தமிழ்க் குழுக்கள் நேற்று பத்திரிகை செய்திகளை வெளியிட்டுள்ளன.

அரசாங்கம் சர்வசன வாக்கெடுப்பை நடாத்த எடுக்கும் முயற்சி, ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பிய தமிழ்க் குழுக்களை ஏமாற்றி வஞ்சித்ததமைக்குச் சமனானது என ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் கூறியுள்ளார்.

தற்போது இணைக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சர்வசன வாக்கெடுப்பைநடாத்தும்முயற்சிக்கு சகல அமைப்புகளும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

1987-ம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் போது, இந்த வாக்கெடுப்பு ஒருபோதும் நடாத்தப்படமாட்டாது. சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தவே இந்த சரத்து சேர்க்கப்பட்டுள்ளது என இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியால் எமக்கு உறுதி பனிக்கப்பட்டது என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு வடக்கு-கிழக்கு இணைப்புத் தான் என தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்தது.

# கலைஞர்கள் அபிலாசைக்கு அரசு எதிராகவேயுள்ளது

## சிங்கள நாடக ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரபல சிங்கள நாடக ஆசிரியர் சுகதபால டி சில்வா அரச விருதைப்பெற மறுப்புத் தெரிவித்துள்ளார். நடிகர் றிச்சேட் டி செய்ஸா கொலை தொடர்பாக அரசு நடந்து கொண்ட முறைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும்வகையிலேயே அவர் விருதை ஏற்க மறுத்துள்ளார்.

கலாசாரத் திணைக்கள சிங்கள நாடக உப-குழுவுக்குச் சுகதபால எழுதியகடிதத்தில், விருதுக்காகத் தன்னைத் தெரிவு செய்தமைக்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், தார்மீக நியமங்களின் அடிப்படையில் தனக்கு விருதைப்பெறச் சம்மதமில்லை எனத் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தில் உள்ளவர்களை போற்றிப் புகழாதவர்கள் எப்படி நடத்தப்படுவார்கள் என்பதற்கு றிச்சேட் டி செய்ஸாவின்கொலை ஒரு உதாரணம். அரசு கலைஞர்களின் அபிலாசைகளுக்கு எதிராகவே செயல்படுகிறது என்று சுகதபால டி சில்வா கூறியுள்ளார்.

# கொலை மிரட்டலையடுத்து சுங்க அதிகாரி ஓட்டம்

(கொழும்பு)

கொலைப் பயமுறுத்தலுக்குப் பயந்து ஓர் சிரேஷ்ட சுங்க அதிகாரி தனது குடும்பத்துடன் அமெரிக்காவுக்கு ஓடிவிட்டார். இதனை அவரது நெருங்கிய உறவினர் தெரிவித்தார்.

தனக்குப் பாதுகாப்பு வழங்கும்படி இவர் பலமுறை கோரியும் அக்கோரிக்கை கவனிக்கப்படவில்லை அதனை அடுத்தே அவர் குடும்பத்துடன் அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ளார். பல லட்சம் ரூபா சம்பந்தமான கடத்தல்மோசடிகளைக் கண்டுபிடித்த அனுரா குணதிலக்கா என்ற சிரேஷ்ட சுங்க அதிகாரிக்குப் பலமுறை கொலைப் பயமுறுத்தல்கள் விடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது கடத்தல் மோசடிகளில் முன்னாள் பொலிஸ்மா அதிபரின் சகோதரரும் மற்றும் செல்வாக்குள்ள சிலரும் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# வடமராட்சிப் பகுதியில் வெகுஜன ஒன்றியம் உதயம்

(பருத்தித்துறை)

வடமராட்சியின் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியமொன்று உதயமாகியுள்ளது. வடமராட்சிப்பகுதி மக்களின் பிரச்சினைகளை முன்னெடுத்து அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண நடவடிக்கைகள்மேற்கொள்வதே இவ் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் முக்கிய நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வடமராட்சிப் பகுதியிலுள்ள வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர். இக் கூட்டத்திலே விடுதலைப்புலிகள் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. செல்வம், வடமராட்சி உதவி அரசியல் பொறுப்பாளர் திரு. தயா

# எமது பணத்தில் ஒருபகுதி தர்மம் செய்யப்படவேண்டும்

## -யாழ். அரசாங்க அதிபர்

(கொழும்புத்துறை)

''மானிடப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் ஏழைப்பிள்ளைகள், அநாதைகள் ஆகியோருக்கு உள்ளன்போடு செய்யும் புனிதமான சேவைகள் நாம் ஆண்டவனுக்குச் செய்யும் சேவையாகும். இப்படியான தூய சேவை விமோசனம் கொடுக்கும். இதனை மக்கள் ஒருவரும் உணர்ந்து செயற்படுவதில்லை. எமக்குக் கிடைக்கும் பணத்தில் ஒரு பகுதியைத் தருமம் அறப்பணிகளுக்காகச் செலவளிக்க முன்வர வேண்டும்''

இவ்வாறு யாழ். இந்து சமயப் பேரவையின் ஆதரவில் கைதடி சைவச் சிறுவர் இல்லம் 18வது கொடிவாரம் நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கு பற்றி உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட ஆணையாளரும் அரசாங்க அதிபருமாகிய கா. மாணிக்கவாசகர் கூறினார்.

இந்து சமயப் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா தலைமையில் ஆரம்பமான இக்கொடிவார நிகழ்வை யாழ். அரச அதிபர்திரு. கா. மாணிக்கவாசகர் முதலில் மங்கள விளக்கேற்றிகொடியை ஏற்றிவைத்தார்.

அரச அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில் ''எமது சமயம் ஆதியும் அந்தமும் இல்லாத புனிதமான சமயம் என்றும், எமது சமய பண்பாடு, கலாசார மரபுகளைப் பேணிப்பாதுகாக்கஒவ்வொரு சமய நிறுவனங்களும் முன்வந்து சேவை மனப்பான்மையுடன் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் என்றும், இங்கு 50க்கும் மேற்பட்ட அநாதைப் பிள்ளைகள் இருப்பதை நான் நன்கு உணர்ந்து சில உதவிகளை செய்துள்ளேன் என்றும், இவர்கள் பிற்கால வாழ்வுக்கு வெளிநாட்டு ஒரு சில அன்பர்களிடம் இருந்து கிடைக்கும் பணத்தை முதன் முதலாகக் கைதடிப் பகுதி இச்சிறார்களுக்கு வழங்கவும் இன்னும் சில உதவிகளையும் செய்ய முன்வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.''

நல்லை ஆதீனகுரு மஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரியசுவாமிகள் ஆசியுரை வழங்குகையில் ''சிவனை முழுமுதற் கடவுளாக வணங்கும் நாம் இன்று சிவராத்திரி புனிதமான நாளில் இப்புனிதமான பணியைச் செய்ய முன்வந்துள்ளோம். அநாதைச் சிறார்

தொண்டுள்ளத்துடன் செயற்பட சகல இந்துசமய ஆலயங்களும், இந்து அமைப்புக்களும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ். தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, யாழ். வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம், சாவகச்சேரி மேலதிக அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம் பிள்ளை, இல்ல ஸ்தாபகர் குலபதி, திரு. ஆறுமுகம்- கந்தையா ஜே. பி., பேரவைப் பொருளாளர் திரு. சி. நாகராசா, இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. லே. கெ. தவபாலன் ஆசிரியர் ஆகியோர் உரை நிகழ்த்தினார்.

கொடி விற்பனையை யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஆரம்பித்து வைத்தார்.

பக்திப்பாடலை அடுத்து மகேசுவரப் பூஜையும் இடம் பெற்றது. (24)

# மாணவர் உணவு முத்திரை வழங்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வறுமை நிவாரணம் பெறும் குடும்பங்களில் உள்ள 5 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட சுமார் 12,000 மாணவர்களுக்கு மாணவ உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளன. பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசாமியின் நடவடிக்கைகளையடுத்து இப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 35 கிராம சேவை உத்தியோகத்தர்களும் இம் மாணவர் உணவு முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுள்ள மாணவர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டி பிரதேச செயலர் அலுவலகத்திற்கு வழங்கி

# நிர்வாகிகள் தெரிவு

வண்ணார்பண்ணை. தாமரை வீதி பாரதியார் சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக க. குமாரசாமியும் செயலாளராக க. சோதிலிங்கமும், பொருளாளராக தி. சிவபாலசுப்பிரமணியமும், கணக்காய்வாளராக சு. பரமசிவமும், ஆலோசகராக சு. நாகராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களாக செ. புஸ்பராசாவும், இ. விஜயநாதனும், நா. மயில்வாகனமும், வ. இரத்தினசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஃ ஃ

யாழ்ப்பாண இலங்கா சித்த ஆயுர்வேத வைத்திய கல்லூரியின் நிர்வாக சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் புதியதலைவராக விஜயநாதனும், செயலாளராக திருநாமநாதனும், பொருளாளராக சகியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஃ ஃ

# இன்றைய நிகழ்வுகள்

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய ஆதரவில் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் நடத்தும் சைவசமயப் பெருவிழா இன்று காலை எட்டுமணியளவில் யாழ். இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஃ ஃ ஃ

ஆராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டுமணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது இதில் சங்கானை கோட்டக்கல்வி அதிகாரி ப. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், கடற்புலிகள் அமைப்பைச் சேர்ந்த தேவநேசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணமாவட்டஇந்து இளைஞர்பேரவையின் விசேட ஆலோசனைக்கூட்டம் நல்லை ஆதீனம் அருகேயுள்ள தர்ம சேவைத் தொடர்பகத்தில் இன்று பிற்பகல் 4-30 மணியளவில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் இம் மாதம் 26-ம், 27-ம், திகதிகளில் நடைபெறவுள்ள இந்து இளைஞர் பேரவையின் 11 வது தேசிய மாநாட்டில் மாவட்டத்தின் சார்பாக சமர்பிக்கப்படவுள்ள பிரேரணைகள் பற்றி ஆராயப் படவுள்ளது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் இன்றும், நாளையும் இடம் பெறவுள்ளது இதில் பிரதம விருந்தினராக சிவசாயபீடாதிபதி எஸ். மோகனதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (05)

ஃ ஃ ஃ

சாவகச்சேரி கற்குழி பாரதி படிப்பகத்தின் 32-ம ஆண்டு நிறைவு விழாவும், சாவகச்சேரி நகரசபை ஆணையாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற த. நவரத்தினராசாவின் சேவை நலம் பாராட்டு விழாவும் இன்றுமாலைநான்கு மணியளவில் பாரதி படிப்பக முன்றலில் நடைபெறவுள்ளது இந் நிகழ்விற்கு யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்சு. டிவகலாலா தலைமை வகிக்க இருக்கிறார்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கிரிக்கட் அணிக்கும் யாழ் புனித சம்பந்திரிசியார் கல்லூரியின் கிரிக்கட் அணிக்கும் இடையிலான கிரிக்கட் போட்டிகள் இன்று தொடர்ந்தும் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது. யாழ். வடக்கு கல்விப்பணிப்பாளர் (வலயம் 02) திரு க. கந்தசாமி பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கிறார். (25)

ஃ ஃ ஃ

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிஇன்று பிற்பகல் 1 30 மணியளவில் அதிபர் திரு. நா. ஜெயநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கானைக் கல்விக்கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு ப. விக்கினேஸ்வரன் அவர்கள் பிரதமவிருந்தினராகவும் சங்கானைக் கோட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. மு. முருகன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஃ ஃ ஃ

மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்குப்பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும்.

ஃ ஃ ஃ

நல்லூர் சென் பெனடிக்ற் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் மூன்று மணியளவில பாடசாலை மைதானத்தில் அதிபர் அருட் சகோதரி எம். லைசா தலைமையில் நடைபெறவுள்ளது, இதில் பிரதம விருந்தினராக கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப்பணிப்பாளர் வி. தானையா, விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பை சேர்ந்த தமிழ்மறவன் ஆகியோரும் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

வடமராட்சிப் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் நடைபெறவுள்ளது சகல விளையாட்டு கழகங்களின் நிர்வாகிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

ஃ ஃ ஃ

(சுன்னாகம்)

லின் ஒன்றியத்தின் முக்கிய நோக்கமாகும் எனத் தெரிவிக்கப் பட்டது.

இவ் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியக் கூட்டமொன்று அண்மையில் ...

...றுப்பாளர் திரு. செல்வம், வடமராட்சி உதவி அரசியல் பொறுப்பாளர் திரு. தயா ஆகியோரும் பங்குபற்றி கருத்துரைகளை வழங்கினர்.

(25)

# கம்பியூட்டர் கல்வி வழங்க சிறப்புமாணவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மூன்றாம் வருட பொருளியல் துறை சிறப்புக்கலை மாணவர்கள் ''கம்பியூட்டர்'' அடிப்படை கற்கை நெறியினை தமக்கு வழங்குமாறு கலைபீடாதிபதியை கேட்டுள்ளனர்.

1990-91 கல்வியாண்டு ''பொருளியல்துறை'' சிறப்புக்கலை பிரிவினரான பொருளியல், அரசறிவியல், சமூகவியல் ''சிறப்புக்கலை'' மாணவர்கள் கம்பியூட்டர் கற்கை நெறியானது இன்றைய மாணவ சமுதாயத்தின் பொருளாதார கற்கை நெறியில் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது என்றும் அதன் அவசியத் தன்மை குறித்தும் விளக்கியுள்ளதுடன் கற்கைநெறியினை காலம்தாழ்த்தாது வழங்குமாறு கோரிக்கைவிடுத்துள்ளனர்.

வர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டி பிரதேச செயலர் அலுவலகத்திற்கு வழங்கியுள்ளனர். பிரதேச செயலர் அலுவலகம் இவ் உணவு முத்திரைகளை மிகவிரைவாக வழங்குவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இன்னும் சில தினங்களில் இம் மாணவர் உணவு முத்திரைகள் உரிய மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(25)

## போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளது

12-ம், 13-ம், திகதிகளில் நடைபெற இருந்த வேலணை ஊர்காவற்றுறை கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான கணித விஞ்ஞானப்புதிர் போட்டிகள் 14-03-94 திங்களன்று சகல வகுப்புகளுக்கும் முன் குறிப்பிட்ட நிலையங்களில் நடைபெறும் என்பதை கோட்டப்பிரதிக்கல்விப்பணிப்பாளர் அறியத்தருகிறார்.

நாளில் இப்புனிதமான பணியைச் செய்ய முன்வந்துள்ளோம். அநாதைச் சிறார்களுக்கு உதவி செய்யும் நன்நோக்குடன் ஆரம்பித்த இக்கொடி வாரத்தில் சகலரும் ஒன்றுபட்டு வாரிவழங்க முன்வர வேண்டுமென்றும், இப்போராட்டத்தின் மத்தியில் யார் ஒருவரோ பலரோ நல்ல பணிகளைச் செய்து நெற்றியில் யார் திருநீறு பூசுகிறாரோ அவரே தம்மை முற்றாக அர்ப்பணித்து தொண்டு செய்யும் உள்ளம் கொண்டவராவார். நாம் தருமம் செய்து இறைவனுக்குச் செய்யும் தொண்டு போல் மக்களுக்கும், சிறார்களுக்கும் தொண்டு செய்ய முன்வர வேண்டும். இன்று எமது மண்ணில் முக்கால் பங்கு கோயில்கள் காவல்துறையில் வழக்கு நடக்குது என்றும், இந்த நிலைமாறி புனிதமான சமயப் பணியை நடாத்த முதியோர் காட்டிய வழியில் தெய்வசிற்றை, சமயப்பற்று...

...னும், பொருளாளராக சகியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஃ ஃ

யாழ்ப்பாணம் இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது தலைவராக அதிபர் மு. செல்லையாவும், செயலாளராக செ. லிங்கநாதபிள்ளையும், பொருளாளராக திருமதி வி. பரதனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

...கும் இடையிலான கிரிக்கட் போட்டிகள் இன்று தொடர்ந்தும் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ ஃ

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி இன்று கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி. இ. நந்தகுமார் தலை...

# கட்டளை அதிகாரியிடம் அதிகாரம் வழங்க உத்தரவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் கட்டளை அதிகாரிகளிடம் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரங்களை வழங்கும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இராணுவத் தளபதிக்குப் பணித்துள்ளார்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொண்டு, அப்பகுதிகளை இராணுவ அதிகாரிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஃ ஃ ஃ

(சுன்னாகம்)

யாழ்ப்பாணம் வலயம் இரண்டில் ஆண்டு 12, 13, ஆம் வகுப்புக்களில் சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்சிக் கருத்தரங்கு இன்று இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காலை 8-30 மணி முதல் 4-30 மணிவரை நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு நிதிக்காக செல்லையா மெற்றாஸ்மயிலின் நெறியாள்கையில் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து இன்று இரவு எட்டு மணியளவில் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது


# விளையாட்டுவிழா 1994

## மரதன் சைக்கிள் ஓட்டப் போட்டி

(ஆண்கள்)

## பிரதேச செயலகம், கரவெட்டி.

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் தங்கள் விண்ணப்பத்தை 1994-03-30 ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பி. கு. - இப்போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் தாம் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசிப்பவர் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை பிரதேச செயலகம் கரவெட்டியில் அறிந்து கொள்ளலாம்.

பிரதேச செயலர்

கரவெட்டி. (சி-8823)


# சைவசமயபெருவிழா நடத்த சன்மார்க்க சபை ஏற்பாடு

குரும்பசிட்டி சன்மார்க்க சபை, தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான ஆதரவில் நடாத்தும் சைவ சமயப் பெருவிழா நாளையும் நாளை மறுதினமும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளை துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் முதல் நாள் விழாவில், ஆய்வரங்கில், ''இந்துக் கிரியைகள்'' எனும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணனும் ''வரலாற்று நோக்கில் சைவ சித்தாந்தம்'' எனும் தலைப்பில் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. ...னும், ''வீர சைவம் - ஓர் ஆய்வு'' எனும் தலைப்பில் இந்துநாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் திரு எம். வேதநாதனும் விரிவுரையாற்ற உள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் யாழ் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவர் பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் நடைபெறும். அன்றைய ஆய்வரங்கில் ''ஈழத்து இந்துமதக் கலைகள்'' எனும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலமும், ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்'' எனும் தலைப்பில் பண்டிதர் இ. நமசிவாயமும் கருத்துரை வழங்குவர் தொடர்ந்து இசை நடையிட்ட உரை நடைக்கோவை என்பனவும் இடம் பெறும்.

(09), 11)


# லொறி வாடகைக் கூலிக்கான கேள்விப்பத்திரம்

வலிகாமம் பகுதி சங்கானை, சுன்னாகம், மானிப்பாய், தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு, கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிலையங்களிலுள்ள 6000 போத்தல் கள்ளை நாளாந்தம் தொடர்ச்சியாகத் திக்கம் வடிசாலைக்கு ஏற்றி இறக்குவதற்கு லொறிச் சொந்தக்காரர்களிடமிருந்து வாடகைக் கூலிக்கான கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது.

விண்ணப்பங்கள் 18-03-1994 ஆந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக, நேரில் மூடிய உறையில் அரக்கு முத்திரையிட்டு (சீல் செய்து) பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பொதுமுகாமையாளர்,

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,

நடுவப் பணியகம், மானிப்பாய்.

(சி-8824)

நல்லூர் இள நிலையம் மா... மன்றம் யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

வெளியே கூச்சல்; உள்ளே ஜாலி.

— சீனப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## அடுத்தவன் வளவிற்குள் சென்றால்...

தன் வீட்டினுள் ஆயிரம் சோலிகளை வைத்துக் கொண்டு அடுத்தவன் வீட்டுப் பிரச்சினைக்கு வந்துவிட்டது என்பது போல் சிறிலங்காவின் உயர் அதிகார வட்டாரம் இனப்பிரச்சினை விவகாரத்தில் கனடாவின் கரிசனை குறித்து சிறிச்சினந்துள்ளது; "கனடா தனது நாட்டிலேயே கியூபெக் தொடர்பாக பாரதூரமான இனப்பிரச்சினையை எதிர் நோக்கி இருக்கின்றது; அவர்கள் தமது பிரச்சினைக்குத் தாம் தீர்வுகாண முடியாமல் இருக்கும் போது எமக்குப் பிரச்சினை தீர உதவ வருவது சந்தேகத்தை ஊட்டுவதாகவுள்ளது", இதுவே சிறிலங்கா அவ்வதிகார வட்டத்தின் கருத்தாகும்,

கனடாவில் இனப்பிரச்சினை இருப்பது என்பதும், பிரெஞ்சு மொழிபேசும் கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தனியரசு கோருவதும் சிறிலங்கா அரச வட்டாரங்கள் கூறுவது போன்று உண்மைதான், ஆனால், சிறிலங்காவில் இன்று நிலவும் இனப்பிரச்சினையுடனும், ஒடுக்குமுறையுடனும் ஒப்பிட்டுப்பேச முடியுமா என்பதே கேள்வியாகும். ஆனால் இவ் ஒப்புவமையானது கஞ்சிக்கழும் சிறுவனதும், சோறு வேண்டாம் கேக்தான் வேண்டும் எனக் கேட்கும் சிறுவனுக்கும் இடையிலான ஒப்புவமை போன்றதாகவே இருக்கும்

கியூபெக்கில் உள்ள பிரஞ்சுக்காரர்களில் பெரும்பான்மையினர் தனியரசு ஒன்றை அமைக்க விரும்புகின்றார்கள்தான்; இதன் வெளிப்பாடு தேசிய இனப்பிரச்சினை ஒன்றிற்கு தனியரசு ஒன்று அமைத்தலே இறுதியான முடிவாக இருக்க முடியும் என்பதைக் காட்டுகின்றது; ஏனெனில், கனடாவிலுள்ள சிறுபான்மை இனங்கள் குறிப்பாக, பிரெஞ்சுக்காரர்கள் பெரும்பாலும் பெரும்பான்மை ஆங்கிலேயருக்குச் சமனான அந்தஸ்துடனும், சுதந்திரத்துடனுமே வாழ்கின்றனர்.

அங்குள்ள அரசியலமைப்பின் பிரகாரம் பாதுகாப்பு, வெளியுறவு, மற்றும் பணம் போன்ற முக்கிய சில விடயங்கள் மட்டுமே மத்திய அரசிடம் உள்ளது, அரசியல் அமைப்பு ரீதியாகவும் சம அந்தஸ்து பெற்றுள்ள இவர்கள் மொழி, கலாசாரம், ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பனவற்றில் பிரெஞ்சுக்காரர்கள் புறக்கணிப்பிற்கு உள்ளாகவில்லை, சிறுபான்மையினரான பிரெஞ்சுக்காரரே கனடாவின் பிரதமமந்திரிகளாகக் கூட இருந்துள்ளனர்கள்;

மேலும், கியூபெக் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு

# பொரு. தடைநீக்கமும், போர்நிறுத்தமும் பேச்சுக்கான சூழலை உருவாக்கும்

**-அங்கிலிக்கன் ஆயர் அறிக்கை**

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட்டு சமாதானம் உதயமாக வேண்டும் என்பதை யாழ்ப்பாண மக்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருப்பதை வடமாகாணத்திலிருந்து திரும்பியுள்ள எமது தூதுக்குழுவினர் தெளிவாக உணர்ந்துள்ளனர். இவ்வாறு கொழும்பு திரும்பிய பின்னர் வெளியிட்ட அறிக்கையொன்றில் அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், வடபகுதிக்குப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்பட்டு மோதல்கள் நிறுத்தப்பட வேண்டும்- இத்தகையதொரு நிலையானது இருதரப்பிலும் சம்பந்தப்பட்டவர்களின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான சூழ்நிலையை உருவாக்கும் எனவும் தெரிவித்துள்ளார்;

அத்துடன் வடபகுதிக்கும், தென்பகுதிக்கும்இடையிலான தொடர்புகள் பாரதூரமாக பாதிக்கப்பட்டிருக்கின்றது; தென் பகுதியில் என்ன நடக்கிறது என்பது பற்றி இங்குள்ள எமது அரசியல் தலைவர்கள் கூறுவது மட்டுமே எமக்குத் தெரியும். கொழும்பில் பிரசுரிக்கப்படும் பத்திரிகை எமக்குக் கிடைப்பதில்லை: வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் எம்மால் கேட்கவோ அல்லது பார்க்கவோ முடியாது இருக்கிறது. இது போலவே வடபகுதியில் என்ன நடக்கின்றது என்பது பற்றித் தென் பகுதியில் உள்ள மக்களுக்குத் தெரியாது எனவும் வடபகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்;

யாழ்ப்பாணச் சந்தைகளுக்குச் சென்ற நாம், அங்கு சில பொருட்களின் விலை கொழும்பு விலையிலும் பார்க்க உயர்வாக இருப்பதை அறிந்தோம்; வடபகுதி மக்களின் கஷ்டங்களை அறிவதற்காகவே நாம் அங்கு சென்றோம்; தமது அன்பிற்குரியவர்களின் மரணம் பற்றியும்' சொந்த இழப்புக்கள் பற்றியும் பலர் தமக்கு கூறினர் எனவும் தெரிவித்துள்ளார்;

## மொகதீன் தெரிவாவார்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம், எச். எம் அஷ்ரப் அம்பாறை மாவட்ட எம். பி பதவியை ராஜினாமா செய்தால் ஏற்படும் வெற்றிடத்திற்கு யூ எல் எம் மொகதீன் நிறுத்தப்படுவார். இதற்கான முடிவை கட்சி எடுத்துள்ளது. இவர் சம்மாந்துறை பிரதேச சபை தேர்தலில் அதிகவிருப்பு வாக்குகளை பெற்றவராவார்.

## வேலையற்ற பட்டதாரிகள் விபரங்கள் சேகரிப்பு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பான விபரங்களைக் கொள்கை திட்டமிடல் அமைச்சு தற்போது திரட்டி வருகின்றது.

அரசாங்க, மற்றும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பில் பயிற்சி அளிக்கவும், வெற்றிடங்களுக்கு ஏற்ப வேலை வாய்ப்பு வழங்கவுமே இந்த விபரங்கள் சேகரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

**உள்ளூராட்சி சபைகளின்**

## செயற்பாட்டைப் பொறுத்தே படையினர் குறைக்கப்படுவர்

**- மேஜர் ஜெனரல் லக்கிஅல்கம**

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் உள்ளூராட்சி அமைப்புக்களின் செயற்பாடுகளைப் பொறுத்தே படையினர் படிப்படியாகக் குறைக்கப்படுவர் என்று பிரதம இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கிழக்கு மாகாணத்தின் பூரண நிர்வாகமும் மக்களின் பிரதிநிதிகளிடம் இப்பொழுது ஒப்படைக்கப் பட்டுவிட்டது. அதனை ஏற்று உரிய முறையில் நடத்த வேண்டியது ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட இந்தப் பிரதிநிதிகளைப் பொறுத்தே பெரும் பிரசவ வேதனைக்கு மத்தியில் தான் கிழக்கு மாகாண உள்ளூராட்சி என்ற குழந்தை பிரசவிக்கப்பட்டுள்ளது. அதை வளர்த்தெடுத்து ஆளாக்க வேண்டியது கிழக்கு மாகாண மக்களையே சாரும். குழந்தை சௌக்கியமாக பிறந்திருப்பது கண்டுமகிழ்ச்சி அடைகிறேன்;

இதேவேளை கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் விமால் குணதிலகா திருகோணமலையில் மாவட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மற்றும் தோல்வியுற்ற வேட்பாளர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளார்.

## அரசை எதிர்த்துப் போரிட சு. கட்சி ஒத்துழைப்பு நல்கவில்லை

**வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு**

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை விரிவுபடுத்துவதற்கு சுதந்திர கட்சி போதிய ஒத்துழைப்பு தரவில்லை என்று நவசமசமாசக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்;

தென்மாகாண சபை தேர்தலில் சமசமாசக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரிக்கும் முகமாக பத்தேகம பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், அரசாங்கம் மக்கள் மீது வரிச்சுமைகளைச் சுமத்திய பல சந்தர்ப்பங்களில் நாம் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினோம். அந்தப் போராட்டங்களை மேலும் விரிவுபடுத்த சுதந்திரக் கட்சியினர் ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும், ஜனநாயகரீதியில் அரசாங்கத்தை கவிழ்த்துவிட சுதந்திரக் கட்சிக்கு அவசியம் இல்லை என்பதால் அவர்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றனர் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை முன்னின்று நடத்துவதற்கு சுதந்திரக கட்சி தயங்குவதற்கு இரு கட்சிகளினதும் கொள்கைகள் ஒரே மாதிரியாக இருப்பதும் காரணமாகும் எனவும், கொள்கைகளை மாற்றிதீவிரமாகச் செயற்பட கீழ்மட்டத்தில் இருப்போர் முனைந்தாலும் தலைமைத்துவத்தில் இருப்போரே இறுதி முடிவை எடுக்கின்றனர் எனவும், அது தலைவர்கள் கடந்த காலத்தில் செய்த மிகப் பெரிய வேலைத்திட்டம் அநுராவை ஐ.தே.க விற்கு தள்ளியதுதான் எனவும் குறிப்பிட்டார்.

**அப்துல்காதர் மீதான வழக்கில்**

## தீர்ப்பு வழங்கப்படுவது ஒத்தி வைக்கப்பட்டது

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் பாவா அப்துல் காதருக்கு எதிரான வழக்கில் மேல்நீதிமன்ற நீதிபதி சி, வி. விக்னேஸ்வரன் தமது தீர்ப்பை இம்மாதம் 29 ஆம் திகதி வழங்குவதாக அறிவித்துள்ளார்.

கடந்த மூன்றாம் திகதி இவ் வழக்கில் தீர்ப்பு கூறப்படுவதாக இருந்தபோதும் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரியின் தடுப்புக் காவல் உத்தரவுகள் தொடர்பான ஆவணங்கள் பரிசீலனை செய்யவேண்டி இருப்பதாக நீதிபதி தெரிவித்தார்.

## 1956இல் ஏற்பட்ட அலை மீண்டும் தென்னிலங்கையில் வீசுகிறது

**- சந்திரிகா குமாரணதுங்க**

(கொழும்பு)

1956இல் ஏற்பட்ட அலைகள் இப்போது தென்னிலங்கையிலிருந்து மீண்டும் வீசுகிறது இதைக் கண்டு அரசாங்கம் அச்சம் கொள்கிறது, இவ்வாறு மேல் மாகாண முதல் அமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்;

அரசாங்கமொன்றை அமைக்கும்;

நாங்கள் பதவிக்கு வந்ததும், இந்நாட்டு மக்களின் பறித்தெடுக்கப்பட்ட உரிமைகளை வழங்குவோம். நாட்டின் தேசிய மூல வளங்களை பயன்படுத்தி நாட்டை புதிய அபிவிருத்தித் திட்டத்தின்

ப்போம். பல்லாயிரக்கணக்கான படித்த புத்திசாலி இளைஞர்கள் ஐ. தே. கவின் ஆட்சியில் டயர்களில் துடிதுடிக்க எரிக்கப்பட்டனர். இன்று பிரேதங்களும், எலும்புக்கூடுகளும் சூரிய கந்தையிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்குப்

## பிரச்சினைக்கு தீர்வு காண

மேலும், கியூபெக் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கு கனடா அரசாங்கங்கள் தொடர்ச்சியாகப் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன, தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் நாடு தழுவிய பெரும் முயற்சி ஒன்றும் நடைபெற்றது, மாறாக, தமது உரிமையைக் கோரும் சிறுபான்மை மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதத்தை கனேடிய அரசு கட்டவிழ்த்து விடவில்லை; சிறுபான்மை மக்களைக் கொன்று குவிக்கவோ அவர்களின் அடிப்படை உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கவோ இல்லை; அவ்வாறு இருந்தும் தனி அரசு தேவைப்படுகின்றது என்றால் இனப்பிரச்சினைக்கு அதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்பதே யதார்த்தநிலை ஆகும்;

இந்நிலையில், கனடாவில் உள்ள சிறுபான்மையினரின் உரிமைகளுடன் இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை ஒப்பிட்டுப் பேசுவதும், உங்கள் பிரச்சினையைப் பாருங்கள், எங்கள் பிரச்சினை எங்களுக்குத் தெரியும் எனக் கூற முற்படுவதும், சிறிலங்கா அரச வட்டாரங்களின் ஏதேச்சதிகாரத்தைக் காட்டுகின்றதே ஒழிய, ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கக் கூடிய பேச்சாக இல்லை,

சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினையை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை எனக் கூறலாம். இதனைத் தீர்த்து வைப்பதற்கு அந்நிய நாடுகளின் தலையீடு தேவையில்லை எனவும் அறிவிக்கலாம்; ஆனால், அந்நிய நாடுகளில் இப்பிரச்சினை தாக்கத்தை விளைவிக்காத வரையிலும், அந்நிய நாடுகளின் உதவிகள், ஒத்தாசைகள் தேவையில்லை என்ற நிலையிலுமே அது சாத்தியமாகும். ஆனால், இலங்கையில் இனப்பிரச்சினை அந்நிய நாடுகளைப் பாதிக்கும் போதும், அவர்களின் உதவிகள் துஷ்பிரயோகம் செய்யப்படும் போதும் அவை குறித்து அவை கேள்வி எழுப்புவதில் சில நியாயங்கள் உண்டு, உங்கள் குடும்பத் தகராறு உங்கள் வளவிற்குள் மட்டும் இருக்கும் போது உங்களுடையதாக இருக்கலாம்; அடுத்தவன் வளவிற்குள் செல்லும் போது அது ஊர்ப்பிரச்சினையாகி விடுகின்றது என்பதே உண்மையாகும்;

இதனை சிறிலங்கா அதிகார வட்டம் மறந்து பேசுவதில் அர்த்தமில்லை; தமிழர் தேசிய இனப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்ற கட்டத்தை எப்பொழுதோ கடந்து விட்டது; ஆயினும், இதற்கொரு சமாதான தீர்வைக் காணும் வாய்ப்பு சிறிலங்காவிற்கு தற்பொழுதும் உண்டு; ஆனால், இதனை சிறிலங்கா இன்னும் கருத்திற்கொள்ளாது விட்டால், எதிர்காலத்தில் தமிழர்களுடன் பேசுவது அந்நிய நாடு ஒன்றுடன் பேசுவதாகவே இருக்கும்;

# பிரச்சினைக்கு தீர்வு காண 25 ஆண்டு ஆட்சி வேண்டும்

## - அநுரா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டுமானால் இன்னும் 25 வருட காலத்திற்கு ஐ.தே.கவே நாட்டை ஆட்சி செய்ய வேண்டும் பதவிக்கு வர முடியாத தலைவர்களை ஆதரிப்பதால் எந்த ஒரு நன்மையும் ஏற்பட்டு விடப்போவதில்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்துள்ள அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

தென் மாகாண சபைதேர்தலில் ஐதேக வேட்பாளர்களை ஆதரித்து தெவிநுவரவில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், எனது செல்வாக்கு பற்றி தென் மாகாண சபையின் தேர்தல் பெறுபேறு வெளியான பின்னர் தெரிந்து கொள்ள முடியும். சந்திரிகா உடைந்து போயுள்ள ஐ-தே.க கப்பலில் நான் ஏறியிருப்பதால் அது அமிழ்ந்து போய் விடுமென ஆருடம் கூறியுள்ளார் ஆனால் அவர் ஏற்கனவே மூன்று கப்பல்களில் ஏறி அவற்றை நாசமாக்கிவிட்டு இப்போது சுதந்திரச் கட்சி என்ற கப்பலில் ஏறியுள்ளார் அதுவும் விரைவில் அழிந்து நாசமாகிவிடும் எனத் தெரிவித்தார்.

அமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தென் மாகாணத் தேர்தலின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்களை ஆதரித்து குடாவல்ல பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், 1983ஆம் ஆண்டில் இந்த நாட்டின் வடக்கு கிழக்கில் ஆரம்பித்த யுத்தத்தை இந்த அரசு முடிவுக்குக் கொண்டு வராது தொடர்ந்து நடத்தி வருகிறது. இதனால் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் படையினரும் அநியாயமாக இறந்து வருகின்றனர். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த யுத்தத்திற்கு தீர்வு காண்போம். ஒன்றிணைந்த இலங்கையை நிறுவுவோம். ஜனாதிபதித் தேர்தலும், பொதுத் தேர்தலும் நடைபெற இருக்கும் இந்த ஆண்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி மக்

பயன்படுத்தி நாட்டை புதிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டு செல்வோம்; வானளாவ உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடு

ருந்து வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவற்றுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடித்து தண்டனை பெற்றுக் கொடுப்போம் எனவும் தெரிவித்தார்.

# குண்டுவீச்சு; எறிகணை வீச்சு உடன் நிறுத்துக

## நவசமசமாஜக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கில் விமானக் குண்டு வீச்சினையும், எறிகணைத் தாக்குதல்களையும், உடனடியாக நிறுத்தும்படி நவசமசமாஜகட்சி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கட்சியின் சார்பில் அரசியல் குழு விடுத்திருக்கும் கோரிக்கையில் மேலும் ஒரு சமூகத்தினை அழிக்கும்பொருட்டு குண்டுவீச்சு விமானங்களை வாங்க கோடிக்கணக்கான பணம் செலவழிக்கப்படவேண்டியது ஏன்?

விமானக் குண்டுவீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதல்களால் மக்களின் உயிர் உடைமைஉடல்உளப் பாதிப்பு ஆகியன மிகப்பெரும் அளவில் ஏற்படுகின்றன. இந்த அழிவுகளை அரசு உடனடியாக நிறுத்தாவிடின் வடக்கிலுள்ள தமிழ்ச் சமூகத்தினை அரசாங்கம் வேண்டுமென்றே அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றது என்பதைக் காட்ட இது சிறந்த உதாரணமாகிவிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தோல்விக்காக வெளியுறவு அமைச்சர் பதவி துறக்க வேண்டும்

## முன்னாள் பாக். பிரதமர் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கொள்கைகள் மீண்டும் மீண்டும் காஷ்மீரைப் பற்றியே சுற்றி வருவது குறித்து அந்நாட்டின் முக்கிய பிரமுகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் நவாப் ஷரிப் இது பற்றி குறிப்பிடுகையில், ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் காஷ்மீர் பிரச்சினையை சமாளிப்பதில் பாகிஸ்தான் தோல்வி கண்டிருப்பதை ஏற்று வெளியுறவு அமைச்சர் சர்தார் ஆரிப் அலி பதவி விலக வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்;

உலக சமுதாயத்தின் ஆதரவை பாகிஸ்தான் இழந்திருபதே பாகிஸ்தான் தனது தீர்மானத்தை தானே மீளப்பெற நேரிட்டமைக்கு காரணமாகும் எனவும் அவர் இஸ்லாமாபாத்தில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்

பெனாசிர் பூட்டோ அரசின் திறமையின்மையினாலேயே தீர்மானத்தை நிபந்தனையின்றி விடுவிக்க நேர்ந்திருப்பதாக காஷ்மீர் பற்றிய தேசிய கமிட்டியின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# செவ்வாய் கிரக ஆய்வு அரிசோனாவில்

(வாஷிங்டன்)

சர்வதேச மட்டத்திலான புதிய விஞ்ஞான ஆய்வுக்குழுவொன்று 'டயோஸ்பியர் 2' என்ற பரிசோதனை சுரங்கத்தினுள் நுழைந்து ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளது. செவ்வாய்க் கிரக ஆய்வே இவர்களது முக்கிய பணியாக இருக்கும்;

செயற்கை உலகம் எனப்படும் கோபுரவடிவிலான இந்தக் குழாயில் 7 பேர் பரிசோதனைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்;

# மனித உறுப்புகளை பாம்புக்கு போட்டார்

(கமரூன்)

சமையலாளியை கொலை செய்து அவரின் உடல் பாகங்களை வீட்டில் செல்லமாக வளர்த்த பாம்புக்கு உணவாகப் போட்டு வந்த ஒருவர் பொலிசாரிடம் உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார். பொலிசார் தற்போது அப் பாம்பைத்தேடி வலை விரித்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான கமரனில் இப் பயங்கரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது; சமையலாளியின் உடலை இவர் பை ஒன்றில் போட்டு தலைநகருக்கு எடுத்துச் சென்றுள்ளார் உறவினர்களிடம் அச்சமையலாளி மதுபானம் அருந்தியதாலேயே உயிரிழந்ததாக இவர் பொய் கூறினார் எனினும் பையை திறந்து பார்த்தபோது அதனுள் சமையலாளியின் உடல் துப்பாக்கி வேட்டுக் காயங்களுடன் காணப்பட்டது. மூளையும், குடலும் காணப்படவில்லை.

தனிப்பட்ட காரணங்களால் தாம் வேலையாளரைக் கொன்றதாக இவர் பின்னர் பொலிசாரிடம் ஒப்புக்கொண்டார்.

# தொழுகைக்கு தடை

ஜெருசலம் பழைய நகரிலுள்ள அல் அக்ஸா மசூதியில் 40 வயதுக்குக் குறைந்தவர்கள் தொழுகைக்கு வருவதை இஸ்ரேலியப் பொலிசார் தடைசெய்துள்ளனர் மேற்குக் கரை காஸா எல்லைகளும் மூடப்பட்டிருப்பதால் அராபியர் எவரும் இஸ்ரேலுக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

# புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைகளை தொடங்குக!

## இந்திய வம்சாவளி உலகளாவிய அமைப்பு கோரிக்கை

(டில்லி)

தமிழ் தீவிரவாதிகளுடன் யுத்த நிறுத்தம் ஒன்று மேற்கொண்டு அவர்களுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென இந்திய வம்சாவளி மக்களின் உலகளாவிய அமைப்பு சிறிலங்கா அரசைக் கோரியுள்ளது.

புதுடில்லியில் நடைபெற்ற இவ் அமைப்பின் இரண்டாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு வெளியே சுமார் 104 நாடுகளில் வசிக்கும் இந்திய வம்சாவளி மக்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இம் மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.]

° ராணுவத்தாக்குதல்கள், வகை தொகையற்ற கைதுகள், பொருளாதாரத்தடை உட்பட தமிழ் மக்களுக்கு எதிரான சகல நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

° தமிழ் தீவிரவாதிகளுடன் யுத்தநிறுத்தம் ஒன்றை அமுல் செய்ய வேண்டும்.

° தமிழ் தீவிரவாதிகளுடனான பரஸ்பர இணக்கம் மூலம் யுத்தமற்ற வலயங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

° குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும். ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

1989இன் நவம்பரில் நடைபெற்ற அமைப்பின் முதலாவது நியூயோர்க் மாநாட்டிலும் இது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

1992 ஓகஸ்ட்டில் இலங்கைத் தமிழர்களின் சார்பில் 40 பக்கமனு ஒன்றை ஐ நா செயலாளர் நாயகத்திடமும் மற்றும் பல ஐ நா குழுக்களிடமும் இந்திய வம்சாவளி மக்களின் உலகளாவிய அமைப்பு கையளித்தது.

இந்த மனு அப்போது கையளிக்கப்பட்டதால்கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற மனித உரிமைகளுக்கான ஐ.நா. உப குழுவின் கூட்டத்தில் பல கேள்விகளை சிறிலங்கா சந்திக்க வேண்டியிருந்தது என இந்த அமைப்பின் மனித உரிமை உபகுழுவின் தலைவர் கூறினார்.

## அமைச்சர் அலுவிஹாரவை கொல்ல முயற்சியாம்

தன்னையும் தனது குடும்பத்தினரையும் சிலர் கொலை செய்ய முயற்சிப்பதாக அமைச்சர் அலிக் அலுவிஹார தெரிவித்ததை அடுத்து பொலிஸ் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. இந்தக் கொலை முயற்சியில் மாத்தளையைச் சேர்ந்த இரு அரசியல் வாதிகள் சம்பந்தப்பட்டிருப்பதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யு என் பியிலிருந்து விலக்கப்பட்ட இருவரே கொலை முயற்சியில் சம்பந்தப்பட்டிருப்பதாக அமைச்சரின் மகனும் மாத்தளை நகர பிதாவுமான ரஞ்சித் அலுவிஹார தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இக் குற்றச்சாட்டைப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது தெரிவித்தார். இதுவரை கொலை முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றாலும் சந்தேக நபர்களைப் பொலிசார் கண்காணித்து வருகின்றனர்.

### எறிகணை வீச்சு

கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது.

மேலும் காரைநகர் வலந்தலைப்பகுதியிலுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் காவல் நிலைகளிலிருந்து கடந்த புதன்கிழமை நள்ளிரவு 1-20 மணியளவில் மூளாய் பொன்னாலைப் பகுதிகளை நோக்கி எறிகணைகள் ஏவப்பட்டன இவ் எறிகணைகள் மூளாயிலுள்ள வயல்வெளிகளிலும், பொன்னாலைப் பக்கமாகவும் வீழ்ந்து வெடித்த போதிலும் சேதங்கள் எதுவும் இன்றிக் காணப்பட்டன. (41)

### போர்க்கால

டத்தின் தேவைக்கு ஏற்ப புதுப்பிக்கப்படவேண்டும். புதுமை சேர்க்கப்படவேண்டும். பழமையில் புதுமை கலந்து, இன்றைய வாழ்வுநிலையை பிரதிபலிப்பதாக கலை ஆக்கங்கள் உருவாக்கப்படவேண்டும்.

முல்லை மாவட்டம் இயல்பாகவே ஒரு கலை மாவட்டமாகத் திகழ்கிறது. முல்லைக் கலைஞர்கள் சிறந்த கலைப் படைப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள். இதேபோன்று ஏனைய மாவட்டங்களிலிருந்தும் சிறந்த கலை ஆக்கங்கள் படைக்கப்படவேண்டும். கலை இலக்கியங்கள் ஒரு குறுகிய வட்டத்திற்குள் ஒடுங்கியிராது, தமிழ் மண் எங்கும் பரந்து வளரவேண்டும்.

பின்வரும் முல்லை மாவட்டக் கலைஞருக்கு தலைவரால் பரிசில்கள் வழங்கப்பட்டன. என். எஸ். மணியம், எஸ். பி. செல்வன், யு. பி. ஞானகணேஸ், என். வி. மூர்த்தி, என். செல்லத்தம்பி, என். மாணிக்கவாசகம், எஸ். கந்தசாமி, எஸ். விக்கினேஸ்வரன், என். அமுதலிங்கம், ஆ. பாலசுந்தரம், ஏ. பாலச்சந்திரன், க. அருந்தாகரன், க. பேரம்பலம், எஸ். கணேசன், க. சங்கர், செல்விகள் அ. ஜொபிட்டா, க. கவிதா.

### வடக்கு

பதி டி.பி. விஜேதுங்கா அமுல் நடத்தி வருகின்றார்.

பிரதேச செயலகங்கள் மூலம் வடக்கு-கிழக்கில் அதிகாரங்களை பரவலாக்குகிறோம். பொதுமக்களை நெருங்கிச் சென்று சேவை செய்கின்றோம் எனக் கூறி அரசாங்கம் தமிழரின் பாரம்பரிய நிலங்களை சிங்களவரின் உடமையாக்குவதற்கு முயல்கிறது.

இந்தப் பிரதேச சபை நிர்வாகத் திட்டத்தின் மூலம் அரசாங்கம் தமிழ் நில ஆக்கிரமிப்பில் ஓரளவு வெற்றியையும் பெற்றுள்ளது.

வடக்கு-கிழக்கில் உள்ள 70 பிரதேச செயலகங்களில் 13சிங்களவரின் கையில் உள்ளன வவுனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும், மணலாறு பகுதியிலும் தற்போதுபல பிரதேச செயலகங்கள்சிங்களவரின் நிர்வாகத்திற்குட்பட்டுள்ளன.

### விகிதாசார

யும் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் கேட்கப்பட்டிருக்கிறார் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் தேர்தல் நடைமுறைகளை மாற்றியமைப்பது குறித்து இப்போது ஆராய்ந்து வருகிறது.

ஜனாதிபதியை தெரிவுசெய்யும்நடைமுறையையும்மாற்றியமைக்க- வேண்டுமென்றும் பாராளுமன்றம் மூலமே அவர் தெரிவு செய்யப்பட வேண்டுமென்றும் அரச மேலிடம் கோரியிருந்தது- இதற்கு சுதந்திரக்கட்சி பகிரங்கமாகவே எதிர்க்க இந்த யோசனை தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ஜேர்மனியிலும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு தொகுதிவாரியாகவும் விகிதாசார முறையிலும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது,

### உலங்குவானூர்தி

முறைகள் சுற்றி வட்டமிட்டு அப்பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புகளை நோட்டமிட்


உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

11.03.94

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1208


# பிரிட்டனில் உள்ள தமிழ் டாக்டர்கள் இலங்கை வடபகுதிக்குச்செல்லுங்கள்

## லண்டன் லூசியன் நகரமேயர் தெரிவிப்பு

"இலங்கையின் வடபகுதியில் அகதிகளின் நிலைமிகவும் மோசமாக இருக்கிறது சிறுவர் போஷாக்கின்றி வாடுகின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ள ஆஸ்பத்திரிதுப்பரவாக இருப்பினும் டாக்டர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது; யாழ். மாவட்டம் முழுவதுக்குமே ஒரேயொரு சத்திரசிகிச்சை நிபுணரே இருக்கிறார். என்னை சந்திக்கக்கூட அந்த சத்திரசிகிச்சை நிபுணரால் முடியவில்லை. அந்தளவுக்கு அவருக்கு வேலைப்பளு பிரிட்டனில் இருக்கும் இலங்கை டாக்டர்கள் இலங்கைக்கு திரும்பிச்செல்ல வேண்டும். இவ்வாறு அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த இலண்டனின் லூசியன்நகர மேயர் சின்னமணி தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கொமன்ஸ் சபையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வடபகுதி நிலைவரங்கள் குறித்து மேயர் சின்ன மணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவத்தினரின் விமானக்குண்டுவீச்சு, எறிகணை வீச்சு இடையிடையே நடைபெறினும் பொதுவில் யாழ்ப்பாணத்தின் சுற்றாடல் மக்கள் தமது காரியங்களைசெய்யக்கூடிய அளவுக்கு பாதுகாப்பானதாக இருக்கிறது எனவும் அவர் கூறினார்

இலங்கை அரசின் பல அமைச்சர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க உட்பட இராணுவத்தின் பிரதம அதிகாரிகளையும் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், பிரிட்டிஷ் தூதுவர், விடுதலைப்புலிகள் இயக்கப்பிரதிநிதிகளையும் இவர் இலங்கை விஜயத்தின்போது சந்தித்தார்

உலகின் கவனம் பொஸ்னியா, சோமாலியா மற்றும் வேறு பிராந்திய நெருக்கடிகள் மீது இருப்பதால் இலங்கை அகதிகளின் வேதனைகள் கஷ்டங்கள் மேலோட்டமாகவே நோக்கப்படுகிறது சர்வதேச சமூகம் மேற்குலகில் உள்ள இலங்கையர்களும் இலங்கை அகதிகளுக்கென நிவாரணங்களை அனுப்பஏற்பாடு செய்யவேண்டும். இத்தகைய அவசியத் தேவைகள் இருந்த போதிலும் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்க இது நல்ல தருணம் எனவும் சாதகமான விளைவுகள் ஏற்படும் என்றும் லூசியன் மேயர் சின்னமணி மேலும் தெரிவித்தார்

### நாவற்குளம்

துக்கறுப்பன் கண்ணன் மரையடிச்ச குளம் ஓமந்தை. வவுனியா) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### மலேரியா

மலேரியாத் தடுப்புக் குழுவை உருவாக்குதல், குறித்த வாரத்தில் தொண்டர்கள் வீடுவீடாகச் சென்று சிரமதான அடிப்படையில் மலேரியாத் தடுப்பு நடவடிக்கைக்கான வீடு, வளவு சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலும், ஈடுபடுத்தலும் மலேரியா பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துதல், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் ஆகிய நிலையங்களில் மலேரியாத் தடுப்பு சம்பந்தமான கலந்துரையாடல்களை ஏற்படுத்தல், பாடசாலைகளில் இக் குறித்த வாரத்தில் ஒவ்வொரு நாளும் குறைந்தது 15 நிமிடங்கள் மலேரியாத் தடுப்புப் பற்றித் தகுதிவாய்ந்தோரைக் கொண்டு சொற்பெருக்காற்றுவித்தல், மாநகரசபை சுகாதாரப் பிரிவினர் மலேரியாத் தடுப்பு வாரத்தில் விசேட சுகாதாரக் கலந்துரையாடல்களையும், நேரடி மலேரியாஒழிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

யாழ்ப்பாணச் செயலாளர் பிரிவில் மலேரியாத் தடுப்பு வாரத்தில் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் வேலைத் திட்டத்துடன் எதிர்வரும் புதன்கிழமை காலை 10.00 மணிக்குச் சமுகம்தந்துவேலை திட்டத்தைப் பரிசீலித்து

## மரண அறிவித்தல்கள்

### தம்பு சின்னத்தம்பி

தம்பு - சின்னத்தம்பி 10-03-94 அன்று சிவபதமடைந்துவிட்டார். அன்னார் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமாவார். அன்னார் காலஞ்சென்ற பூமணியின் அன்புக்கணவரும், ராஜகோபாலன் (டென்மார்க்), புவனேந்திரன் (சுவிஸ்), சிவராஜா, உதயகுமார், ரஞ்சித்குமார், அன்னராணி, ஜெயந்தினி, கலா, சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கணபதி, வேலன் ஆகியோரின்சகோதரனும், சரஸ்வதி (டென்மார்க்), விமலராணி, திலகவதி, மகாலிங்கம், வீரசிங்கம், செல்வராஜா சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாழன் (டென்மார்க்), தயான் (டென்மார்க்), பிரசன்னா (டென்மார்க்), சிந்துஜா (டென்மார்க்), சுவர்ணரூபி, சுவர்ணகாந்தன், சுவர்ணா, ஜெயபரதன், கௌரி, பகீரதன், சிந்து, பைரவி, ரேணுகா, சுகிர்தா, சுமன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 12-03-94 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கொக்குவில். தகவல்!

(7720) மகன் சி உதயகுமார் (பாப்பா)

11.03.94

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1208

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:- இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

24-9390, 28-4817, 42-8429, 22-7271, 24-5137, 27-1255, 27-6439, 27-8959, 42-0962, 26-8746, 24-5140, 42-1046, 41-9484, 24-0207, 27-8517, 26-5206, 27-4628, 26-3944, 22-2432, 24-4701, 26-5191, 24-4265, 28-6748, 28-7662.

# தையல், மனையியல் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரல்

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கொழும்புத்துறை மேற்கு மாதர் அபிவிருத்தி நிலையத்தில் இலவசமாக நடைபெறவுள்ள தையல், மனையியல் பயிற்சி வகுப்புக்களில் மாணவிகளைப் புதிதாகச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் யாழ். பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாதர்களிடமிருந்து யாழ். பிரதேச செயலாளரினால் கோரப்படுகின்றன.

## தகைமைகள்

1) கல்வி: க. பொ. த (சா) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வரவேற்கத்தக்கது

2) வயது: 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்

விண்ணப்ப முடிவு திகதி: 05-04-1994

விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்பட்டு யாழ். பிரதேச செயலாளர் பணிமனைக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(கலாநிதி க. குணராசா)
பிரதேச செயலாளர்

பிரதேச செயலாளர் செயலகம்
யாழ்ப்பாணம்.

(இ-8827)

மணலாறு பகுதியிலும் தற்போதுபவ பிரதேச செயலகங்கள் சிங்களவரின் நிர்வாகத்திற்குட்பட்டுள்ளன.

இவை தமிழ் மக்களின் நிலங்கள் அற்றவை என்பதைக் காட்டுவதற்கே இப்புதிய பிரதேச செயலக நிர்வாக நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (தி),(ச)

முறைகள் சுற்றி வட்டமிட்டு அப்பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புகளை நோட்டமிட்டுச் சென்றது இதேவேளை அராலித்துறை, பொன்னாலை, கொத்தத்துறை கடற்பரப்பை அண்மித்த கரையோரப் பகுதிகளையும் நோட்டமிட்டுச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

திட்டத்துடன் எதிர்வரும் புதன்கிழமை காலை 10.00 மணிக்குச் சமுகம்தரின் வேலைத்திட்டத்தைப் பரிசீலித்து ஒருங்கே செயற்படுத்த வாய்ப்பாகும் எனவும்,

மலேரியாத் தடுப்பு வாரத்திற்குத் தங்கள் வேலைத்திட்டத்தில் முதன்மை வழங்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருஷம் பங்குனித் திங்கள் 1-ம் நாள் (14-3-1994) திங்கட்கிழமை பகல் 12-05 மணிதொடக்கம் 2-05 மணிவரையுமுள்ள மிதுனலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எனது புத்திரன் -திருநிறைச்செல்வன் | எமது புத்திரி -திருநிறைச்செல்வி |
| **விஜயகுமார்** | **நந்தகுமாரி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |
| (த.பொ.மே. நிறுவனம்) | |

திருமணவிழா திருவருள் நலத்தினால், நல்லூர் சிவன் கோவில் தேவஸ்தானத்தில் திருமாங்கல்யம் தரித்துவைக்கப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களுக்கு ஆசிகள் நல்கி தொடர்ந்து மணமகளில்லத்தில் நிகழும் விருந்துபசாரத்தில் பங்குகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகனில்லத்தில் அன்று பிற்பகல் 4-00 மணிக்கு வரவேற்புபசாரணை நிகழும்

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்,

| | |
|---|---|
| திருமதி நா. முருகையாவும், | க. சோமசுந்தரம் தம்பதிகள் |
| பொ. வடிவேல் தம்பதிகள் | 52, செட்டித்தெரு, |
| 'மலைமகள் இல்லம்' | நல்லூர், |
| 20, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

(இரு வீட்டார் அழைப்பு)

(7704) தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை

கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கொக்குவில்.
(7720)

தகவல்:
மான் சி உதயகுமார் (பாப்பா)

# மெக்ஸ் றினோசன்

மண்டைதீவு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த எவரிஸ் றொபேட், ரகுலா தம்பதிகளின் அருமைப் புதல்வன் மெக்ஸ் றினோசன் 10-3-94 வியாழன் அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற முத்துத்தம்பி, அந்தோனியாப்பிள்ளை, வெ. லூயிஸ் அல்வின், லில்லி மாக்கிறட் (சின்னம்மா) ஆகியோரின் அருமைப் பேரனும், றொக்சன், றெமாசன ஆகியோரின் சகோதரனும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். நல்லடக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல 10/6 ஓடக்கரை வீதி,
குருநகர். (7722)

தகவல்:
லூ பீற்றர் வில்சன்

# திருமதி பூமலட்சுமி சிவசிதம்பரக்குருக்கள்

திருமதி பூமலட்சுமி சிவசிதம்பரக் குருக்கள் 11-3-94 வெள்ளிக்கிழமை காலமானார். இவர் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், குரும்பசிட்டியை வதிப்பிடமாகக் கொண்டவரும், மந்திகை அம்மன் கோவில் பிரதம குருவுமாகிய சிவசிதம்பரக் குருக்களின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரி, கிருஷ்ண வீமரோஜா (சுதா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சோமசுந்தரக்குருக்கள் - மீனாட்சி அம்மாவின் புதல்வியும், சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம், சிவபாக்கியம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-3-94) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மந்திகை அம்மன்
கோவிலடி.
(7723)

தகவல்:
சோ. சிவசிதம்பரக்குருக்கள்
(கணவன்)

இறைச்சிக் கோழி
எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளவும்
உங்கள் கோழிகளை சந்தைப்படுத்தவும்
சுவையருவி கோழிப் பண்ணை
மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(இ8822)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 51ஆம் இலக்கத்தில் உள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது